2022 අගෝස්තු 24

2022 ஆகஸ்ட் 24

24 August 2022

NAOSL

# 2018 අංක 19 දරණ ජාතික විගණන පනතේ 14 වන වගන්තිය ප්‍රකාරව පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලබන විගණකාධිපති ත්‍රෛවාර්ෂික වාර්තාව

# 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கை

# Triennial Report of the Auditor General presented in parliament in terms of Section 14 of the National Audit Act, No. 19 of 2018

එකොළොස් වන කාණ්ඩය - **06** (iii)

பதினோராவது தொகுதி - 06 (iii)

Eleventh Volume - 06 (iii)

## ප්‍රාදේශීය සභා

## பிரதேச சபைகள்

## Pradeshiya Sabhas

ජාතික විගණන කාර්යාලය

தேசிய கணக்காய்வு அலுவலகம்

NATIONAL AUDIT OFFICE



# 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான மூன்றாண்டு அறிக்கை

# பிரதேச சபைகள்

---

| | உள்ளடக்கம் | |
|---|---|---|
| | அறிமுகம் | பக்க இலக்கம |
| 01. | கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபை | 10 |
| 02. | கெக்கிராவ பிரதே சபை | 10 |
| 03. | கெப்பிற்றிக்கொல்லாவ பிரதேச சபை | 11 |
| 04. | கலன்பிந்துனுவெவ பிரதேச சபை | 11 |
| 05. | தலாவ பிரதேச சபை | 12 |
| 06. | திறப்பனை பிரதேச சபை | 14 |
| 07. | நொச்சியாகம பிரதேச சபை | 15 |
| 08. | பதவி பிரதேச சபை | 15 |
| 09. | மதவாச்சி பிரதேச சபை | 16 |
| 10. | மிஹிந்தலை பிரதேச சபை | 16 |
| 11. | றம்பேவ பிரதேச சபை | 17 |
| 12. | ஹொரவப்பொத்தானை பிரதேச சபை | 18 |
| 13. | திம்புலாகல பிரதேச சபை | 18 |
| 14. | எலஹெர பிரதேச சபை | 19 |
| 15. | ஹிங்குரக்கொட பிரதேச சபை | 19 |
| 16. | எம்பிலிப்பிட்டி பிரதேச சபை | 20 |
| 17. | இம்புல்பே பிரதேச சபை | 21 |
| 18. | அயகம பிரதேச சபை | 22 |
| 19. | எஹலியகொட பிரதேச சபை | 23 |
| 20. | கலிகமுவ பிரதேச சபை | 27 |
| 21. | தெஹியோவிட்ட பிரதேச சபை | 27 |
| 22. | ருவன்வெல்ல பிரதேச சபை | 27 |
| 23. | மாத்தளை பிரதேச சபை | 28 |
| 24. | தம்புள்ளை பிரதேச சபை | 28 |
| 25. | வில்கமுவ பிரதேச சபை | 29 |
| 26. | கண்டி பட்டணமும் சூழலும் மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபை | 29 |
| 27. | உடபலாத்த பிரதேச சபை | 29 |
| 28. | பஸ்பாகே கோரளை பிரதேச சபை | 30 |
| 29. | தும்பனை பிரதேச சபை | 31 |

| | | |
|---|---|---|
| 30. | பூஜாபிட்டி பிரதேச சபை | 31 |
| 31. | பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபை | 31 |
| 32. | அக்குறணை பிரதேச சபை | 32 |
| 33. | மெததும்பற பிரதேச சபை | 32 |
| 34. | பன்வில பிரதேச சபை | 33 |
| 35. | மினிப்பே பிரதேச சபை | 33 |
| 36. | உடுதும்பற பிரதேச சபை | 35 |
| 37. | குண்டசாலை பிரதேச சபை | 35 |
| 38. | கொட்டகல பிரதேச சபை | 37 |
| 39. | கொத்மலை பிரதேச சபை | 37 |
| 40. | அங்குரன்கெத்த பிரதேச சபை | 39 |
| 41. | அக்மீமன பிரதேச சபை | 39 |
| 42. | எல்பிட்டி பிரதேச சபை | 40 |
| 43. | கரந்தெனிய பிரதேச சபை | 40 |
| 44. | பத்தேகம பிரதேச சபை | 41 |
| 45. | பலப்பிட்டி பிரதேச சபை | 42 |
| 46. | பெந்தோட்டை பிரதேச சபை | 43 |
| 47. | ஹபராதுவ பிரதேச சபை | 43 |
| 48. | தெவிநுவர பிரதேச சபை | 44 |
| 49. | கம்புறுப்பிட்டி பிரதேச சபை | 47 |
| 50. | கொட்டபொல பிரதேச சபை | 48 |
| 51. | திக்வெல்ல பிரதேச சபை | 49 |
| 52. | ஹக்மன பிரதேச சபை | 50 |
| 53. | சூரியவெவ பிரதேச சபை | 50 |
| 54. | கட்டுவன பிரதேச சபை | 50 |
| 55. | ஜா-எல பிரதேச சபை | 51 |
| 56. | கட்டான பிரதேச சபை | 58 |
| 57. | மினுவாங்கொட பிரதேச சபை | 59 |
| 58. | பியகம பிரதேச சபை | 59 |
| 59. | அத்தனகல்ல பிரதேச சபை | 60 |
| 60. | பேருவளை பிரதேச சபை | 61 |
| 61. | தொடன்கொட பிரதேச சபை | 62 |
| 62. | புளத்சிங்கள பிரதேச சபை | 62 |
| 63. | மதுராவல பிரதேச சபை | 63 |


| | | |
|---|---|---|
| 64. | ஹோமாகம பிரதேச சபை | 63 |
| 65. | பொத்துவில் பிரதேச சபை | 64 |
| 66. | அட்டாளைச்சேனை பிரதேச சபை | 64 |
| 67. | நிந்தவூர் பிரதேச சபை | 65 |
| 68. | ஆலையடிவேம்பு பிரதேச சபை | 66 |
| 69. | நாவிதன்வெளி பிரதேச சபை | 67 |
| 70. | திருக்கோவில் பிரதேச சபை | 68 |
| 71. | சம்மாந்துறை பிரதேச சபை | 68 |
| 72. | காரைதீவு பிரதேச சபை | 68 |
| 73. | தமன பிரதேச சபை | 69 |
| 74. | நாமல்ஓயா பிரதேச சபை | 69 |
| 75. | இறக்காமம் பிரதேச சபை | 69 |
| 76. | வெருகல் பிரதேச சபை | 71 |
| 77. | தம்பலகாமம் பிரதேச சபை | 71 |
| 78. | திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை | 71 |
| 79. | மூதூர் பிரதேச சபை | 72 |
| 80. | மொறவெவ பிரதேச சபை | 73 |
| 81. | குச்சவெளி பிரதேச சபை | 74 |
| 82. | கிண்ணியா பிரதேச சபை | 76 |
| 83. | சிலாபம் பிரதேச சபை | 78 |
| 84. | வென்னப்புவ பிரதேச சபை | 79 |
| 85. | நாத்தாண்டி பிரதேச சபை | 82 |
| 86. | வனாத்துவில்லு பிரதேச சபை | 83 |
| 87. | கறுவலகஸ்வெவ பிரதேச சபை | 84 |
| 88. | பன்னல பிரதேச சபை | 84 |
| 89. | பிங்கிரிய பிரதேச சபை | 85 |
| 90. | இப்பாகமுவ பிரதேச சபை | 85 |
| 91. | குருணாகல் பிரதேச சபை | 88 |
| 92. | கல்கமுவ பிரதேச சபை | 89 |
| 93. | கிரிபாவ பிரதேச சபை | 90 |
| 94. | நிக்கவெரட்டிய பிரதேச சபை | 90 |
| 95. | பொல்கஹவெல பிரதேச சபை | 91 |
| 96. | புத்தள பிரதேச சபை | 92 |
| 97. | தனமல்வில பிரதேச சபை | 94 |

| | | |
|---|---|---|
| 98. | படல்கும்புற பிரதேச சபை | 95 |
| 99. | வெல்லவாய பிரதேச சபை | 95 |
| 100. | கதிர்காமம் பிரதேச சபை | 95 |
| 101. | பண்டாரவளை பிரதேச சபை | 96 |
| 102. | மஹியங்கனை பிரதேச சபை | 97 |
| 103. | சொறணாதொட்ட பிரதேச சபை | 97 |
| 104. | ரிதிமாலியத்த பிரதேச சபை | 98 |
| 105. | வலிகாமம் தெற்கு பிரதேச சபை | 99 |
| 106. | காரைநகர் பிரதேச சபை | 99 |
| 107. | நல்லூர் பிரதேச சபை | 100 |
| 108. | வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை | 100 |
| 109. | வலிகாமம் கிழக்கு பிரதேச சபை | 100 |
| 110. | வலிகாமம் வடக்கு பிரதேச சபை | 101 |
| 111. | வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை | 101 |
| 112. | வேலனை பிரதேச சபை | 102 |
| 113. | பூநகரி பிரதேச சபை | 103 |
| 114. | வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை | 103 |
| 115. | பச்சிலைப்பள்ளி பிரதேச சபை | 104 |
| 116. | கரைச்சி பிரதேச சபை | 104 |
| 117. | வவுனியா வடக்கு பிரதேச சபை | 106 |

இலங்கையின் மிகச்சிறிய உள்ளூராட்சி நிறுவனங்கள் பிரதேச சபைகள் ஆகும். 1987 இன் 15 ஆம் இலக்க சட்டத்தினால் இந்த உள்ளூராட்சி நிறுவனங்கள் தாபிக்கப்பட்டுள்ளது. நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்குரிய தீர்மானங்களை எடுக்கும் செயற்பாடுகளின் போது மக்களுக்கு மாகாண மட்டத்தில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதற்காக பிரதேச சபைகள் தாபிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் நாடு முழுவதும் 276 பிரதேச சபைகள் தாபிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைகளுக்குரிய அடிப்படை பணியாக ஒவ்வொரு பிரதேச சபை பிரதேசங்களுக்காக ஸ்தாபிக்கப்பட்ட பிரதேச சபை அந்த பிரதேசத்தின் உள்ளூராட்சி நிறுவனமாக இருக்க வேண்டியிருந்ததுடன் பொதுமக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள், பொதுவாக அந்த பிரதேசத்தின் மக்களின் நலன்கள், வசதிகள் மற்றும் நலன்புரிகள் மற்றும் சகல வசதிகளையும் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல், உரிய சகல விடயங்களையும் முறைமைப்படுத்துதல், நிர்வகித்தல், கட்டுப்படுத்துதல் அதற்குரியதாக இருத்தல் வேண்டும். பிரதேச சபையொன்றில் தலைவரினதும், உப தலைவரினதும் மற்றும் அந்த பிரதேச சபை தாபிக்கப்படுவதாயின் அந்த பிரதேச சபைக்கான அதன் பிரதேசத்தின் அளவு, சனத்தொகை மற்றும் பொருளாதார அபிவிருத்தி ம்ட்டத்தைக் கவனத்தில் கொண்டு அமைச்சரினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற நியதிகளின் மூலம் தீர்மானிக்கப்பட்டு தெரிவு செய்யப்படும் உறுப்பினர் எண்ணிக்கையை கொண்டிருக்கும்.

இலங்கை பிரதான மாகாண சபைகளை மேவுகை செய்யும் வகையில் 276 பிரதேச சபைகள் தாபிக்கப்பட்டுள்ளது. மேல் மாகாணத்திற்காக 28 பிரதேச சபைகளும், தென் மாகாணத்திற்காக 42 பிரதேச சபைகளும், வடமேல் மாகாணத்திற்காக 29 பிரதேச சபைகளும், வடமத்திய மாகாணத்திற்காக 25 பிரதேச சபைகளும், மத்திய மாகாணத்திற்காக 37 பிரதேச சபைகளும், கிழக்கு மாகாணத்திற்காக 37 பிரதேச சபைகளும், வடமாகாணத்திற்காக 28 பிரேச சபைகளும், ஊவா மாகாணத்திற்காக 25 பிரதேச சபைகளும், சப்ரகமுவ மாகாணத்திற்காக 25 பிரதேச சபைகளும் வீதம் தாபிக்கப்பட்டுள்ளது. மேல் மாகாணத்திற்குரிய களுத்துறை மாவட்டத்தில் மில்லனிய பிரதேச சபை 2018 மார்ச் 20 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் தாபிக்கப்பட்டுள்ளது. பின்வரும் வரைபடத்தின் பிரகாரம் மாகாணத்தின் பிரகாரம் இந்த பிரதேச சபைகளின் பரவல் காண்பிக்கப்படுகின்றது.




(வரைபடம் 1)

2018, 2019 மற்றும் 2020 என்ற மூன்று ஆண்டுகளுக்கான 276 பிரதேச சபைகளின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஒட்டுமொத்த வருமானம் ரூபா 97,762 மில்லியன் ஆக இருந்ததுடன் இந்த மூன்று ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஒட்டுமொத்த செலவினம் ரூபா 92,708 மில்லியன் ஆகும். 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டு வரையில் இந்த 276 பிரதேச சபைகளின் வருமான அதிகரிப்பு 26 சதவீதமாக இருந்ததுடன் அந்த வருடத்துடன் ஒப்பிடும் போது செலவினத்தின் அதிகரிப்பு 19 சதவீதம் ஆகும். 2018 ஆம் ஆண்டில் 68 பிரதேச சபைகளின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பற்றாக்குறை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த பற்றாக்குறைகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,311 மில்லியன் ஆகும். 2019 ஆம் ஆண்டு வரையில் இந்த பிரதேச சபைகளுக்கிடையே 86 பிரதேச சபைகளின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பற்றாக்குறை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த பிரதேச சபைகளின் ஒட்டுமொத்த பற்றாக்குறை ரூபா 1,882 மில்லியன் ஆகும். எனினும் 2020 ஆம் ஆண்டு வரையில் இந்த பிரதேச சபைகளுக்கிடையே 98 பிரதேச சபைகளின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பற்றாக்குறை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் ஒட்டுமொத்த பற்றாக்குறை ரூபா 1,974 மில்லியன் ஆகும். இந்த பற்றாக்குறைகளை பகுப்பாய்வு செய்யும் போது தென்படுகின்ற இலட்சணமாக 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் 19 பிரதேச சபைகள் தொடர்ச்சியாக நட்டத்தை காண்பிக்கின்றது. இந்த பிரதேச சபைகளுக்கிடையே 24 பிரதேச சபைகளை 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 மற்றும் 2020 என்ற 02 ஆண்டுகளுக்காக மிகையில் தொடர்ச்சியாக அதிகரிப்பினை காண்பித்திருந்தது.

பிரதேச சபைகளினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 276 பிரதேச சபைகளின் மொத்த சொத்துக்களின் அளவு 2018 ஆம் ஆண்டில் ரூபா 91,438 மில்லியனையும், 2019 ஆம் ஆண்டில் ரூபா 104,579 மில்லியனையும், 2020 ஆம் ஆண்டில் ரூபா 140,874 மில்லியனையும் பிரதிநிதித்துவப்படுத்தியது. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டு வரையில் இந்த பிரதேச சபைகளின் மொத்த சொத்துக்களின் அதிகரிப்பு 54 சதவீதம் ஆகும். 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டு வரையில் கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபையின் மொத்த சொத்துக்களின் அளவு ரூபா 7,881 மில்லியனாலும், ஹொரண பிரதேச சபையில் அந்த அளவு ரூபா 652 மில்லியனாலும், அகலவத்த பிரதேச சபையில் அந்த அளவு 790 மில்லியனாலும், தொம்பே பிரதேச சபையில் அந்த அளவு ரூபா 1,510 மில்லியனாலும், பியகம பிரதேச சபையில் அந்தளவு ரூபா 913 மில்லியனாலும், அத்தனகல்ல பிரதேச சபையில் அந்தளவு ரூபா 3,953 மில்லியனாலும் மொத்த சொத்துக்களின் பெறுமதியில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டு முதல் மேல் மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட்டமையால் உள்ளூராட்சி நிறுவனங்களின் சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்து கணக்கு வைத்தல் மற்றும் காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கீடு செய்தல் என்பன இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

பிரதேச சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 276 பிரதேச சபைகளின் மொத்த பொறுப்புக்களின் அளவு 2018 ஆம் ஆண்டில் ரூபா 13,430 மில்லியனையும், 2019 ஆம் ஆண்டில் அந்த அளவு ரூபா 14,292 மில்லியனையும், 2020 ஆம் ஆண்டில் அந்த அளவு ரூபா 16,326 மில்லியனையும் கொண்டிருந்தது. 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டு வரையில் மொத்த பொறுப்புக்களின் அளவு 22 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 276 பிரதேச சபைகளின் தேறிய சொத்துக்களின் அளவு ரூபா 124,548 மில்லியன் ஆகும். இந்த பிரதேச சபைகளுக்கிடையே கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை ரூபா 10,939 மில்லியன் அதிகரிப்பு தேறிய சொத்துக்களின் அளவினை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், ஆகக் அளவு குறைந்த தேறிய சொத்துக்களின் அளவை ஆகரபத்தன பிரதேச சபை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் அந்த அளவு ரூபா 19 மில்லியன் ஆகும்.

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சகல பிரதேச சபைகளினாலும் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அது 2018, 2019

மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்பட்டு கணக்காய்வு சட்டத்தின் 11(1) மற்றும் 11(2) இன் பிரகாரம் அபிப்பிராயத்தை உள்ளடக்கிய சுருக்கமான அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை என்பன சகல சபைகளுக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2018 ஆம் ஆண்டில் 270 பிரதேச சபைகளுக்காக முனைப்பழியுள்ள அபிப்பிராயமும், உடுநுவர பிரதேச சபைக்காக பாதகமான அபிப்பிராயமும் வெளியிடப்பட்டிருந்தது. வனாத்தவில்லு பிரதேச சபை மற்றும் இப்போலகம பிரதேச சபைகளுக்காக முனைப்பழியற்ற அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்தது. பன்னல, கலன்பிந்துனுவெவ மற்றும் தலாவ பிரதேச சபைகளுக்கான அபிப்பிராயம் மறுக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டிற்காக 260 பிரதேச சபைகளுக்காக முனைப்பழியுள்ள அப்பிராயம் வெளியிடப்பட்டிருந்ததுடன் வெலிவிட்டிய, திவித்துர, இராஜாங்கனை, பதவிய மற்றும் கெப்பிற்றிகொல்லாவ பிரதேச சபைகளுக்காக முனைப்பழியற்ற அபிப்பிராயமும் வெளியிடப்பட்டிருந்தது. 10 பிரதேச சபைகளுக்காக பாதகமான அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்ததுடன் பன்னல மற்றும் ஹொரவப்பொத்தானை பிரதேச சபைகளுக்கான அபிப்பிராயம் மறுக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டிற்காக 267 பிரதேச சபைகளுக்காக முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்ததுடன் கொட்டகல, கங்க இஹல கோரளை, வவுனியா மேற்கு மற்றும் வென்கலசெட்டிக்குளம் பிரதேச சபைகளுக்காக முனைப்பழியற்ற அபிப்பிராயமும் வெளியிடப்பட்டிருந்தது. உடுநுவர, மிகிந்தலை மற்றும் ஹிங்குராக்கொட சபைகளுக்காக பாதகமான அபிப்பிராயமும், லக்கல மற்றும் கலன்பிந்துனுவெவ பிரதேச சபைகளுக்காக அபிப்பிராயம் மறுக்கப்பட்டிருந்தது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் ஒவ்வொரு மூன்று நிதியாண்டு காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் ஒன்பது மாதங்களுக்குள் ஒவ்வொரு கணக்காய்விலிருந்தும் கிடைக்கின்ற நிறுவனத்தினது நிலைமை அறிக்கையொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களுக்கிடையே இனங்காணப்பட்ட பிரதான குறைபாடுகள் மற்றும் அதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் மற்றும் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களினால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் காணப்பட வேண்டியிருந்ததுடன் பாராளுமன்றத்திற்கு அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரையில் அது தொடர்பாக காணப்பட்ட தற்போதைய நிலைமையும் குறிப்பிடப்படல் வேண்டும். மேற்கூறப்பட்ட சட்டத்தின் பிரகாரம் இதுவரை தீர்த்து வைக்கப்படாதுள்ள 117 பிரதேச சபைகளின் கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

## 01. கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| இறைச்சிக்கடை, மீன்தட்டிக் கடைகள் மற்றும் வாகனத் தரிப்பிடம் என்பவற்றை வாடகைக்கு வழங்கியதற்காக 2004 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை அறவிட வேண்டிய ரூபா 1,452,928 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவைப் பணம் இந்த ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 பெப்ரவரி 08 ஆந் திகதி வரையில் ரூபா 1,014,818 தொகை அறவிட வேண்டியிருந்தது. |

## 02. கெக்கிராவ பிரதே சபை

| | | | |
|---|---|---|---|
| வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய NCP/LG/DE/04/04/2020 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் சபையின் இயந்திர உபகரணங்கள் கடன் அடிப்படையில் வாடகைக்கு வழங்காதிருக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கும் போது சபையின் 04 இயந்திரங்கள் 240 சந்தர்ப்பங்களின் போது கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட மையால் பெற வேண்டிய இயந்திர வாடகை வருமானம் ரூபா 1,061,500 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | வாகன வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ரூபா 1,061,500 தொகை அறவிட வேண்டிக் காணப்பட்டது. |

## 03. கெப்பிற்றிக்கொல்லாவ பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் ரூபா 45,000,000 செலவில் கெப்பிற்றிக்கொல்லாவ பேருந்து நிலைய சந்தை கட்டிடத் தொகுதி வளவில் 46 கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும், சபை உறுப்பினர்களினால் திறந்த கேள்வி கோருவதற்கு எதிர்ப்பு தெரிவித்தமையால் 19 கடைகள் 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | இந்த கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கேள்வி கோரி கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 25 கடைகள் மாத்திரம் 2022 சனவரி 01 ஆந் திகதி முதல் கேள்வி கோரி வழங்கப்பட்டிருந்தது. |

## 04. கலன்பிந்துனுவெவ பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| தடாக செயற்திட்டத்திற்குரிய வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் சபையின் ஆதனங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 4,245,707 செலுத்த வேண்டியதாக காணப்பட்டதுடன் 2012 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை 08 வருடங்கள் கடந்திருந்தும் செலுத்த வேண்டிய மீதி பணம் தொடர்பாக முகாமைத்துவம் உரிய தரப்பினருடன் முறையான சட்டரீதியான இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. | முறையாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | சட்ட ஆலோசனைகளைப் பெற்று மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்ட ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 05. தலாவ பிரதேச சபை

------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய டிப்பர் வண்டி 2019 சனவரி 07 ஆந் திகதி முதல் இனங்காணப்பட்ட நிறுத்தல் முறைமை பழுதுபார்த்தல் மேற்கொள்ளாமல் ஓட்டத்தில் ஈடுபட்டமையால் 2019 சனவரி 31 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டு ரூபா 933,500 நட்டம் ஏற்பட்டிருந்தது. | பழுதுபார்த்தல்கள் உரிய காலப்பகுதியில் மேற்கொண்டு அறவிட வேண்டிய நட்டத்தை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வாகனம் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் தாமதடைந்துள்ளது. | தற்போது வரையில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. |
| (ஆ) | ரூபா 6,390,000 பெறுமதியான சபைக்குச் சொந்தமான கெப் வண்டி 2019 ஏப்ரல் 15 ஆந் திகதி விபத்திற்குட்பட்டமையால் ரூபா 3,400,520 நட்டமொன்று ஏற்பட்டிருந்த போதிலும், அந்த விபத்து தொடர்பாக தகவல்களின் பிழையான தன்மை மற்றும் குறைவான பயன்பாட்டின் அடிப்படையில் காப்புறுதி இழப்பீடு நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் வாகனம், உள்நாட்டு முகவரின் பிரதேச பழுதுபார்த்தல் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | விரைவாக பரிசோதனையொன்றை நடாத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. | இதில் 90 சதவீதம் தலைவரிடமிருந்தும் 10 சதவீதம் சாரதியிடமிருந்தும் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதும், அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | கரகஹவெவ கழிவுப்பொருள் தளத்தை நிர்மாணிப்பதற்காக 2012 முதல் 2017 வரையான | கரகஹவெவ கழிவுப்பொருள் தளத்தை பயன்பாட்டிற்கு | ஒருகலயாய கழிவுப் பொருள் தளத்தை நிரந்தரமாக சபையின் கழிவுப்பொருள் | இது தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டுகளின் போது மத்திய சுற்றாடல் அதிகார சபையிலிருந்து சபைக்கு 3,446,848 தொகை கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 1,121,026 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தை நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்படாமையால் அந்த கழிவுப் பொருள் நிலையத்திலிருந்து எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அகற்றுவதற்காக ஈடுபடுத்தப்படுகின்றது. | |
| (ஈ) | 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 9,500,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட தமுத்தேகம வாராந்த சந்தைக் கட்டிட தொகுதி பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காடு வளருவதற்கு இடமளிக்கப்பட்டு பயனற்ற வகையில் காணப்பட்டது. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதில் காணப்படுகின்ற குறைபாடுகளை தயாரித்ததன் பின்னர் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தற்போது வரையில் அது பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது காணப்பட்டது. |
| (உ) | பிரதேச சபையினால் ரூபா 5,421,890 செலவில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த எப்பாவல சுடலைக்கூடம் அதற்கு தேவையான அடுப்புகள் பொருத்தப்படாமையால் | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் போது இதனை பொதுமக்களின் உரித்துக்கு கையளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தற்போது வரையில் அந்த நிலுவைகள் அவ்வாறே காணப்படுகின்றது. அடுப்பு பொருத்தப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் 02 வருடங்களை விஞ்சிய காலத்திலிருந்து விளைவற்றுக் காணப்பட்டது. | | | |

**06. திறப்பனை பிரதேச சபை**

-----------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | வருமானம் உழைக்கும் நோக்கத்தில் மாங்குளம், திவுல்வெவ கிராமத்தில் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,344,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட நீர்ச் சுத்திகரிப்பு இயந்திரம் 2020 ஆம் ஆண்டின் போது கழற்றி அகற்றப்பட்டு சபை வளவில் பொருத்தப்பட்டமையால் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | இந்த நீர்ச் சுத்திகரிப்பு இயந்திரம் வருமானத்தை உழைக்கும் வழிகளில் ஈடுபடுத்தப்படல் வேண்டும். | பிரதேச சபை வளவில் தாபிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்கு ஈடுபடுத்தப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | சபை அதிகாரப் பிரசேதத்தில் அமைந்துள்ள சுற்றுலா சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல்களிலிருந்து 2019 ஆம் ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 3,332,341 வரித் தொகை செலுத்துதல் புறக்கணித்தமையால் சபையினால் 2020 நவம்பர் 12 ஆந் திகதி வழக்கொன்று தொடரப்பட்டிருந்த | சந்தை அனுமதிப்பத்திர வருமானம் அறவிடப்படல் வேண்டும். | வழக்குத் தீர்ப்பின் பிராகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

போதிலும் அந்தப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 07. நொச்சியாகம பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| 2019 செப்தெம்பர் மாதத்தின் போது ரூபா 16,938,732 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கூட்டுப்பசளை உற்பத்தி நிலையம் செயற்பாடற்று காணப்பட்டதுடன் ஆண்டில் ரூபா 1,299,378 தொகை செலவில் எடுத்துச் செல்லப்பட்டு கழிவுப்பொருள் கூட்டுப்பசளை தளத்திற்கு அருகில் 04 ஏக்கர் நிலத்தில் குவிக்கப்பட்டு தீவைக்கப்பட்டிருந்தது. கூட்டுப்பசளை உற்பத்திக்காக தேவையான இயந்திர பொறிமுறைகள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக தேவையான இயந்திர உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தேவையான உபகரணங்கள் கிடைத்ததன் பின்னர் முறையாக கழிவுப் பொருள் முகாமைத்துவம் செய்யப்படும். | இயந்திர பொறிமுறைகளை கொள்வனவு செய்யாமையால் கூட்டுப்பசளை உற்பத்தி மேற்கொள்ளப் படாதிருந்ததுடன் கழிவுகளுக்கு தீ வைத்தல் மேற்கொள்ளப் படுகின்றது. |

## 08. பதவி பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| 2019 ஆகஸ்ட் 16 ஆந் திகதி தீப்பித்தலுக்குட்பட்ட பிளிசறு செயற்திட்டத்தின் பேல் இயந்திரத்தின் ரூபா 800,000 தொகையான நட்டத்தை அறவிடுவதற்காக அதற்குப் பொறுப்பான தரப்பினரை இனங்கண்டு கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நட்டத்திற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு அந்த நட்டம் அறவிடப்படல் வேண்டும். | இதற்காக ஆரம்ப விசாரணையொன்றை நடாத்துவதற்கு உள்ளூராட்சி ஆணையாளரால் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். | இதற்காக 2021 பெப்ரவரி 23 ஆந் திகதி விசாரணையொன்றை நடாத்துவதற்காக விசாரணை குழுவொன்று நியமிக்கப்பட்ட போதிலும் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

## 09. மதவாச்சி பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| புறநெகும செயற்திட்டம் மூலம் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்ட 46 கடைகள் வாடகை அடிப்படையில் உடன்படிக்கை செய்து வழங்கப்பட்ட போதிலும் உரிய கடைகளுக்காக அறவிட வேண்டிய ரூபா 19,250,000 வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடைகளுக்காக அறவிட வேண்டிய நிலுவைப் பணத்தை பெற்றுக் கொள்வதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவிடப்பட்டிருக்க வில்லை. மதிப்பீட்டு தொகையை விஞ்சியதாக காண்பிக்கப்பட்ட வாடகையை குறைக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. இதுவரையில் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. |

## 10. மிஹிந்தலை பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| மிஹிந்தலை நூலகம் மற்றும் கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக பிரதேச சபையினால் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 3,958,710 கடன் தொகையை பெற்றுக் கொண்டதற்காக ரூபா 50,150 கடன் தவணைப் பணமொன்று மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்த போதும், அந்த கேட்போர் கூட நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கேட்போர் கூடத்தின் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏதேனும் செயற்திட்டமொன்றின் கீழ் மேற்கூறப்பட்ட மாடியை சுற்றுலா விடுதியொன்றாக அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | கேட்போர் கூடம் நிர்மாணிக்கப் பட்டிருக்கவில்லை. |

**11. றம்பேவ பிரதேச சபை**

-------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | வாகனம் / இயந்திரம் வாடகை அடிப்படையில் வழங்கியதால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,159,775 நிலுவை வாகன வாடகை அறவிட வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | உரிய தரப்பினரை இனங்கண்டு நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அறவிட வேண்டிய தரப்பினரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 திசெம்பர் 16 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | சபைக்குரிய ரூபா 6,390,000 பெறுமதியான கெப் வண்டி 2019 மே 16 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டமை தொடர்பாக அதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,583,250 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பணம் அதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து விரைவாக அறவிடப்படல் வேண்டும். | இந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ரூபா 100,000 தொகை மாத்திரம் அறவிடப்பட்டுள்ளது. மேலும் ரூபா 1,483,250 அறவிட வேண்டியுள்ளது. |
| (இ) | சபையின் பழைய நூலக கட்டிடத்தை பழுதுபார்ப்பதற்கு ரூபா 2,978,302 செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஆக்கபூர்வமானதாக பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு | பயன்படுத்தக் கூடிய நிலைமைக்கு உட்படுத்த வேண்டியதுடன் மிகுதி வேலைகள் நிறைவேற்றாமல் நிறுத்தி வைத்தல் பணம் செலுத்திய | ஆற்றிய வேலைகளுக்காக ரூபா 2,978,302 தொகை சபையிலிருந்து செலுத்தப்பட்டிருந்த துடன் நிறுத்தி வைக்கப்பட்ட பணம் ரூபா 324,148 உள்ளூராட்சி திணைக்களத்தால் | வேலைகளை பூர்த்தி செய்து பயன்படுத்துவதற்கு முடியுமான நிலைமைக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர் களிடமிருந்து அந்தப் பணம் அறவிடப்படல் வேண்டும். | விடுவிக்கப்பட்டிருந்தது. | |

**12. ஹொரவப்பொத்தானை பிரதேச சபை**

---------------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தையில் 09 கடைகள் 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பழுதுபார்த்து வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபைக்கு 840,000 மதிப்பீடு செய்யப்பட்ட நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | உரிய கடைகளை பழுதுபார்த்து வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | LDSP செயற்திட்டத்தின் மூலம் இந்த சந்தைத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது. | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நட்டம் ரூபா 988,800 ஆக காணப்பட்டது. |

**13. திம்புலாகல பிரதேச சபை**

--------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| 2016 யூன் முதல் 2017 யூன் 28 வரையான காலத்தில் நீர்க்கட்டணம் அறவிடும் போது பெறுவனவு பற்றுச்சீட்டுக்களின் மூலப்பிரதியில் குறிப்பிடப்பட்ட தொகையினை விட குறைந்த தொகையொன்று உப பிரதிகளில் குறிப்பிடப்பட்டு ரூபா 2,625,660 தொகை புறக்கணித்தமை தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப விசாரணை மேற்கொண்டு நட்டம் அறவிடப்படல் வேண்டும். | ஆரம்ப விசாரணையொன்று வடமத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களம் மூலம் மேற்கொள்ளப் படுகின்றது. விசாரணை நடவடிக்கைகளை விரைவாக செய்யுமாறு 2020.05.21 ஆந் திகதி கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது. | தற்போது பொலன்னறுவை நீதிமன்றத்தில் வழக்கொன்று நடைபெறுவதுடன் கணக்காய்வு உத்தியோகத்தர் சாட்சியாளராக முன்வந்துள்ளார். |

## 14. எலஹெர பிரதேச சபை

----------------------------------------

| | | | |
|---|---|---|---|
| 2015 முதல் 2017 வரையான கால எல்லையில் தூர சேவை பேரூந்து தரிப்பிடம் மற்றும் சந்தைத் தொகுதி நிர்மாணிக்கும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக சபை அங்கீகாரம் மற்றும் சாத்தியவள ஆய்வின்றி கருங்கல் ஒன்றை உடைத்து அகற்றுவதற்காக முறையான நிதி விதிகள் பின்பற்றப்படாமல் செலுத்தப்பட்ட ரூபா 15,675,708 தொகை பயனற்ற செலவினமாக இருந்ததுடன் மேலும் அறவிட வேண்டிய ரூபா 16,200,000 நிலுவைத் தொகையொன்றை கோரி ஒப்பந்தகாரரால் சபைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்த போதிலும், பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயனற்ற பணம் மற்றும் ஏனைய நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பாக பிரதேச சபை கவனம் செலுத்தி பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உள்ளூராட்சித் திணைக்களத்தின் விசாரணை அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இது தொடர்பாக உள்ளூராட்சித் திணைக்களத்தால் விசாரணையொன்று நடாத்தப்பட்ட போதிலும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 15. ஹிங்குரக்கொட பிரதேச சபை

--------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (அ) ஹிங்குரக்கொட நீதவான் நீதிமன்ற வளவில் நிர்மாணிக்கப்பட்ட சட்டத்தரணி அலுவலக வளவிற்குரிய காணியை கையேற்று நிர்மாணிக்கப்பட்ட 16 கடைகளுக்காக அறவிட வேண்டியிருந்த கேள்வி கட்டணம் ரூபா 3,465,325 | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். மிகுதி நடவடிக்கைகள் விரைவாக அமுல்படுத்தப்படும். | பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் மாதாந்தம் அறவிட வேண்டியிருந்த ரூபா 720,000 வாடகைப் பணம் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | குத்தகை வசதிகளின் கீழ் பெறப்பட்டிருந்த கெப் வண்டி 2015 ஆம் ஆண்டின் போது விபத்துக்கு உட்பட்டிருந்ததுடன் காப்புறுதி உரித்தாக சபைக்கு கிடைக்கப் பெற்ற ரூபா 3,300,000 தொகை நடைமுறைக் கணக்கில் தொடர்ச்சியாக விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. வாகனத்திற்கான முழுமையான இழப்பீடாக கிடைக்க வேண்டியிருந்த மிகுதிப் பணம் ரூபா 3,000,000 இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திலிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. | முழுமையான இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது குத்தகை செலுத்தி முடிவடைந்துள்ளதுடன் வாகனத்தின் உரித்தைப் பெற்றுக் கொண்டு ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் புதிய வாகனமொன்றை பெற்றுக் கொள்வதற்கும் உரிய ஆவணங்கள் உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சரி செய்யப்பட்டிருக்க வில்லை. |

## 16. எம்பிலிப்பிட்டி பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| 2011 ஆம் ஆண்டின் போது மகநெகும செயற்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட 07 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டிருந்த சமூக அடிப்படையிலான அமைப்பிற்கு அந்த வேலைக்காக தேவையான மூலப்பொருட்கள் வழங்குவதற்கு சபை எந்தவொரு கடப்பாடும் காணப்படாதிருந்த போது | முறையான விசாரணையொன்றை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த நபர்கள் இனங்காணப்படல் வேண்டும். | இந்த வழக்கு தற்போது நீதிமன்றத்தில் விசாரணையில் காணப்படுவதுடன் அதற்காக வருகை தருகின்ற சட்டத்தரணிக்கு சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் சட்டத்தரணிக் கட்டணம் | இந்த வழக்கு தற்போது விசாரணையில் காணப்படுகின்றது. |

சபையின் அங்கீகாரமின்றி தலைவரால் தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கை செய்து தேவையான கொங்கிறீட் சிறுகற்கள் வழங்கப்பட்டிருந்தது. அதற்குரியதாக அந்தக் கம்பனிக்கு செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 2,088,000 தொகை கழிக்கப்படாமல் 04 வேலைகளிலிருந்தும் இறுதிப் பட்டியல் மற்றும் நிறுத்தி வைத்தல்கள் உரிய சங்கத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அந்த 04 வேலைகளுக்குரிய சிறுகற்கள் வழங்கிய கம்பனிக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,308,780 தொகை செலுத்தாமையின் காரணமாக உரிய கம்பனியால் சபைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் உரிய வழக்கின் சட்டத்தரணிக் கட்டணமாக ரூபா 461,500 தொகை செலவிடப்பட்டிருந்தது.

செலுத்தப்பட்டுள்ளது என அறியத் தருகின்றோம்.

## 17. இம்புல்பே பிரதேச சபை

2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது வாராந்த சந்தை அபிவிருத்திக்காக ரூபா 4,561,397 செலவிடப்பட்டிருந்த போதிலும் சந்தையினை நடாத்துவதற்கு பொருத்தமான பிரகாரம் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாதிருந்ததுடன் 2020 ஆம்

நிதிஏற்பாடு வழங்கி சந்தையை நடாத்துவதற்கு பொருத்தமான பிரகாரம் அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

இந்த சந்தை வளவில் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி அமைச்சிற்கு மதிப்பீடு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் நிதிஏற்பாடு கிடைத்ததன் பின்னர்

2021 திசெம்பர் வரையிலும் வாராந்த சந்தை அபிவிருத்தி செய்யப்பட்டிருக்க வில்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டின் போதும் உரிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு சபை தவறியிருந்தது. | | வாராந்த சந்தை வியாபாரிகளுக்கு பயன்படுத்தக்கூடிய பிரகாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

## 18. அயகம பிரதேச சபை

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | 2077 சதுர அடி கூட்டுத்தொகையான அயகம வாராந்த சந்தையில் 16 கடைகள் மற்றும் விவசாய பயிர்கள் விற்பனை நிலையத்தின் கடைகளுக்காக அறவிட வேண்டியிருந்த முற்செலுத்தும் பணம் (Key Money) முறையே ரூபா 716,000 மற்றும் ரூபா 1,460,000 தொகைகள் 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானங்களை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 மார்ச் மாதம் முதல் கொரோனா தொற்றுநோய் பரவலுடன் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. விரைவாக அந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடிதம் மூலம் முற்செலுத்திய பணத்தை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அவை அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் 2020 ஆம் ஆண்டின் போது கழிவுப் பொருள் 324 மெற்றிக் தொன் அளவில் அகற்றுவதற்காக ரூபா 882,122 கிரயம், பதவியணியில் 06 ஊழியர்களும், வாகனம் மற்றும் 02 இயந்திர உபகரணங்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. எனினும் அந்தக் கழிவுப் பொருட்களை அகற்றுதல் | முறையான கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். | பிரதேச சபையினால் தற்போது கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதனை மேற்கொண்டதன் பின் உடனடியாக முறையான கழிவுப்பொருள் | கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக தேவையான காணியை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| முறையாகவும் சுற்றாடலுக்கு இணங்கும் திட்ட முறைமைக்கு பறம்பாக நிலத்தில் குழிகள் தோண்டப்பட்டு அதனுள் கழிவுப்பொருட்கள் அகற்றி குழிகளை மூடுவதன் மூலம் சுற்றாடல் பிரச்சினைகள் கணிசமான அளவில் தோன்றியிருந்தன. | | முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டமொன்று திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்படும். | |

## 19. எஹலியகொட பிரதேச சபை

-------------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்பட்ட கிராமிய பிரதேசங்களில் 1000 கிலோமீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் 2017 - இன் கீழ் சபை அதிகாரப் பிரதேசத்தில் 02 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்தவதற்காக 2017 ஆகஸ்ட் 02 ஆந் திகதி ரூபா 58,905,292 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. ரூபா 120,750 செலவில் பெறுகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் அபிவிருத்தி நிர்மாணம் மற்றும் இயந்திர உபகரண அதிகாரசபைக்கு நிர்மாண நடவடிக்கைகள் | கிடைத்துள்ள நிதிஏற்பாட்டை மாகாணத்தின் அபிவிருத்திக்காக ஆக்கபூர்வமானதாக பயன்படுத்தவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படல் வேண்டும். | பிரதம அமைச்சின் 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் இந்த 02 செயற்திட்டங்களினதும் அபிவிருத்தி நிர்மாணம் மற்றும் இயந்திர உபகரண அதிகார சபைக்கு கையளித்து நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. மிகக்குறுகிய காலத்தில் 02 செயற்திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டியிருந்தமை மற்றும் உள்ளூராட்சி பொறியியலாளர் இடமாற்றம் பெற்றுச் சென்றமை, உடன்படிக்கை காலம் நீடிக்கப்பட்டமை, இரண்டு செயற்திட்டங்களும் கஷ்டமான | 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கையளிக்கப்பட்டிருந்தது. குறித்துரைத்த திகதியில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாமையால் செயற்திட்டம் இரத்துச் செய்யப்படுகின்ற திகதி வரையிலும் அதற்காக ரூபா 13,054,363 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2018 நவம்பர் மாதம் நிதிஏற்பாடு மீள கையேற்கப்பட்டிருக்க வில்லை. | | பிரதேசங்களில் அமைந்திருந்தமை போன்ற விடயங்களின் அடிப்படையில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | |
| (ஆ) | எஹலியகொட நகரத்தில் அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்தலின் கீழ் நகரத்தின் பாதையின் எல்லையில் அமைந்துள்ள கட்டிடத்தின் ஒரு பகுதியை அகற்றும் போது அதன் உடைந்த துண்டுகள் தேவையான இடங்களுக்கு எடுத்துச் செல்லும் போக்குவரத்துச் செலவினம் பிரதேச சபையின் மூலம் செய்வதற்கும், பின்னர் அந்த செலவினங்களை நகர அபிவிருத்தி அதிகார சபை மூலம் மீளளிப்புச் செய்வதற்கும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்த வாய்மொழிமூல இணக்கப்பாட்டின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டின் போது முற்பணமாக ரூபா 900,000 | செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன்னர் உடன்படிக்கையை செய்து முறையாக நிறைவேற்றுதல் வேண்டும். | எஹலியகொட நகர அபிவிருத்தி செயற்திட்டம் மிகவும் விரைவாக மேற்கொள்ள வேண்டிய செயற்திட்டமாக இருந்தமையால் உடன்படிக்கை கையொப்பமிடாமல் முன்னாள் தலைவர் சபைக்கு அறிவித்து உரிய நடவடிக்கைகளை செய்து பட்டியல்கள் கிடைத்ததன் பின்னர் உடன்படிக்கை கைச்சாத்திட்டமை தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கொன்று காணப்படுகின்றது. | 2022 பெப்ரவரி வரையிலும் நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்திருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகை சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்தப் பணத்தை மீளளிப்புச் செய்வதற்கு தவயிருந்தது. மேலும் ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய ரூபா 4,390,000 தொகையான மிகுதிப் பணம் தொடர்பாக ஏற்படுத்தப்பட்டிருந்த பொறுப்புக்களை தீர்ப்பதற்கு முடியாமையின் காரணமாக நிலுவைப் பணத்திற்கு மேலதிகமாக ஏற்பட்ட நட்டமாக ரூபா 2,634,000 இழப்பீட்டுத் தொகையையும் கோரி ஒப்பந்தகாரரால் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. | | | |
| (இ) | ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் நிதியுதவியின் கீழ் ரூபா 39,281,227 தொகை செலவில் 2012 திசெம்பர் மாதம் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த கெட்டஹெத்த பல்நோக்கு கட்டிடம் 2018 ஆம் ஆண்டு வரை செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 100,000 மாதாந்த வாடகையில் ஒரு வருட காலத்திற்காக கட்டிடத்தின் | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டியிருந்ததுடன் நிலுவை வாடகை அறவிடப்படல் வேண்டும். | வாடகை செலுத்துமாறு அவ்வவ்போது வாடகையாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ள துடன் வாடகையாளருக்குரிய உபகரணங்களுடன் தற்போது கட்டிடம் சபைக்கு கையேற்கப் பட்டு வாடகையாளரால் புறக்கணிக்கப்பட்ட பணத்தை அறவிடுவதற்காக | 2022 பெப்ரவரி வரையிலும் உரிய நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |

முதலாவது மாடி மற்றும் தரைமாடி என்பன வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், வாடகையாளரால் கட்டிடத்தில் பல்வேறு குறைபாடுகள் காண்பிக்கப்பட்டு அவற்றை தயாரித்து தருமாறு கோரி வாடகைப் பணம் செலுத்துதலை புறக்கணித்திருந்ததுடன் சபை நிதியத்திலிருந்து ரூபா 2,331,013 செலவில் சகல பழுதுபார்த்தல் நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் போது இலக்கிடப்பட்ட பணிகளுக்காக கட்டிடத்தை ஈடுபடுத்துவதற்கும் உடன்படிக்கைப் பிரகாரம் வாடகை செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வாடகையாளர் வேலை ஆரம்பித்த திகதி முதல் வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு 2019 ஒக்டோபர் 08 ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபையின் அவசர முன்மொழிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்டமையின் காரணமாக 2020 திசெம்பர் வரையிலும்

கட்டிடத்தில் உள்ள சுகாதார உபகரணங்கள் தொடர்பாக மதிப்பீடொன்றை பெற்றுக்கொள்வதற்கு பிரதேச சபை சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் குழுவிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளதுடன் இது தொடர்பாக வாடகையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது இந்தக் கட்டிடம் மீண்டும் கேள்வி கோருவதற்காக தேவையான மதிப்பீட்டு அறிக்கையொன்றை வழங்குமாறு மதிப்பீட்டு திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது.

சபைக்கு வாடகை வருமானம் அறவிடுவதற்கு முடியாதிருந்ததுடன் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 2,400,000 ஆகும்.

## 20. கலிகமுவ பிரதேச சபை

-----------------------------------------

| | | | |
|---|---|---|---|
| மாட்டிறைச்சி கடையிலிருந்து 2014 ஆம் ஆண்டு முதல் கிடைக்க வேண்டிய ரூபா 525,146 நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் பணம் அறவிட வேண்டியிருந்த போதும் அவருக்கு சொந்தமாக சொத்துக்கள் காணப்படவில்லை என நீதிமன்றத்தில் அறிக்கையிடப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைப் பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

## 21. தெஹியோவிட்ட பிரதேச சபை

-------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட நிலுவை ஏக்கர் வரி மீதியில் ரூபா 1,656,808 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்பட்ட போதிலும் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை மீதி அறவிடப்பட்டிருக்க வில்லை. |

## 22. ருவன்வெல்ல பிரதேச சபை

-----------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 154 ஆம் பிரிவு மற்றும் சப்ரகமுவ மாகாண உள்ளூராட்சி | சட்டம் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விற்பனை செய்யப்பட்டுள்ள காணி தொடர்பான விபரங்கள் வருமான | உள்ளபடியான விற்பனையின் அடிப்படையில் அறவிட வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| ஆணையாளரின் 2005 யூன் 01 ஆந் திகதிய 2005/04 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3(iv) மற்றும் 3(x) ஆம் பிரிவுகளின் பிரகாரம் காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து விபரங்களைப் பெற்று கூறுகளாக்கி விற்பனை செய்யப்படுகின்ற காணிகளின் விற்பனைப் பெறுமதியில் ஒரு சதவீதம் வரியொன்று சபைக்கு அறவிட வேண்டியிருந்த போதிலும், கூறிடப்பட்ட காணிகளின் மதிப்பீட்டுப் பெறுமதி மாத்திரம் 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வரி ரூபா 1,121,730 அறவிடப்பட்டிருந்தது. | | பரிசோதகருக்கு வழங்கி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

## 23. மாத்தளை பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் இறுதியில் அறவிட வேண்டிய மொத்த நிலுவை நீர்க்கட்டண வருமானம் ரூபா 3,709,745 ஆகும். | நிலுவைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைப் பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

## 24. தம்புள்ளை பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 12,587,598 தொகையான தொங்கல் களஞ்சிய கணக்கின் வரவு மீதி தீர்த்து வைக்கப்படாமல் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. | தொங்கல் களஞ்சிய கணக்கின் மீதி ஏற்பட்டமைக்கான காரணத்தை கண்டறிந்து சரிசெய்தல் வேண்டும். | தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | சரிசெய்யப்பட்டிருக்க வில்லை. |

## 25. வில்கமுவ பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 3,068,983 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதியில் 2018 ஆம் ஆண்டில் பிழையான வரவு மற்றும் செலவு குறிப்பின் கீழ் பதிந்ததன் கீழ் இறுதி மீதியாக ரூபா 1,501,545 செலவு மீதியொன்று காணப்பட்டதுடன் தொங்கல் கணக்கின் மீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளில் தேவையான சீராக்கங்களை செய்து தொங்கல் கணக்கு தீர்த்து வைக்கப்படல் வேண்டும். | நாட்குறிப்பு இலக்கம் 03, 06, 07 இன் கீழ் தொங்கல் கணக்கில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் சரிசெய்யப்பட்டுள்ளது. | குறைபாடுகள் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. |

## 26. கண்டி பட்டணமும் சூழலும் மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| பெறுமதி ரூபா 480,000 ஆன உயிர்வாயு அலகு 05 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | சொத்துக்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். | நல்ல நிலைமைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | விளைவற்றுக் காணப்படுகின்றது. |

## 27. உடபலாத்த பிரதேச சபை

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | 07 நீர் உத்தேச திட்டத்திலிருந்து பல வருட காலம் முதல் அறவிட வேண்டிய ரூபா 775,528 நீர்க் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நீர் மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ரூபா 40,472 தொகை அறவிடப்பட்டுள்ளது. மிகுதிப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | செயற்படு நிலைமையில் காணப்படுகின்ற 14 நீர் உத்தேச திட்டங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,239,000 | நிலுவை நீர்க் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நீர் மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ரூபா 40,472 தொகை அறவிடப்பட்டுள்ளது. மிகுதிப் பணம் அறவிடப்பட்டிருக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | நீர்க் கட்டணம் நீண்ட காலம் முதல் நிலுவையாக காணப்பட்டது. | | | வில்லை. |
| (இ) | புஸ்ஸல்லாவ புதிய சந்தைக் கட்டிடத் தொகுதியில் 14 கடைகளிலிருந்து 2015 ஆம் ஆண்டில் புதிய மதிப்பீட்டின் அடிப்படையில் அறவிட வேண்டிய ரூபா 9,648,000 கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய வருமானம் சேகரிக்கப்படல் வேண்டும். | உடன்படிக்கை செய்யப்பட்ட பிரகாரம் நிலுவை கடை வாடகை செலுத்துமாறு அறிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | புதிய மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்படவில்லை. |

**28. பஸ்பாகே கோரளை பிரதேச சபை**

-------------------------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | கிறீன் வூட் கருங்கல் செயற்திட்டத்திற்குரிய காணியை பயன்படுத்துவதற்காக கடந்த ஆண்டிற்காக ரூபா 1,650,000 தொகை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு செலுத்தப்பட்டிருந்த போதும், செயற்திட்டத்தின் மூலம் வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை குறித்துரைத்த பிரகாரம் முகாமைத்துவம் செய்வதன் மூலம் ஆகக்கூடிய நலன்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் அமுல்படுத்தப் பட்டுள்ளது. | குறைபாடுகள் சரிசெய்யப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகை மூலம் 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் | சொத்துக்களின் மூலம் ஆகக்கூடிய பயன்பாடு பெறப்படல் வேண்டும். | நீர்மானி பொருத்தப்படுகின்றது. | 466 நீர் மானிகள் பொருத்தப்பட்டிருக்க வில்லை. |

ஆண்டு வரையான காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,176,440 பெறுமதியான 480 நீர் மானிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நீர் இணைப்பை வழங்கி பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

## 29. தும்பனை பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட 447 முச்சக்கர வண்டிகளுக்காக கிடைக்க வேண்டிய கட்டணம் ரூபா 1,576,090 அறவிடப்பட்டிருக்கவில்லை. | முச்சக்கர வண்டிக் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட்டிருக்க வில்லை. |

## 30. பூஜாபிட்டி பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| சபைக்குச் சொந்தமான பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத ரூபா 19,527,492 பெறுமதியான 10 வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனை மேற்கொண்டு சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 31. பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| 506 முச்சக்கர வண்டிகளுக்காக அறவிட வேண்டிய ரூபா 4,493,500 மற்றும் 07 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக அறவிட வேண்டிய கட்டணம் | அறவிட வேண்டிய வருமானம் பெறப்படல் வேண்டும். | முறையான புள்ளி விபரமொன்று மேற்கொள்ளப்படும். | கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| கணிப்பிடப்பட்டு அறவிடப்பட்டிருக்க வில்லை. | | | |

## 32. அக்குறணை பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| உள்ளுராட்சி ஆணையாளரின் 2013 யூலை 31 ஆந் திகதிய 07 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு வரையில் பிரதேச சபையினால் 29 முச்சக்கர வண்டி தரிப்பிடங்களில் 570 முச்சக்கர வண்டிகள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன்மூலம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,543,000 தொகையான நிலுவை வருடாந்தக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தது. | பதிவு செய்துள்ள சகல முச்சக்கர வண்டிகளிலிருந்தும் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது பிரதேச சபையினால் முச்சக்கர வண்டி மெய்மையாய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ள துடன் காணப்பட்ட கொரோனா தொற்று நோய் நிலைமையின் காரணமாக பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. அந்த ஆண்டின் வருடாந்த கட்டணமாக ரூபா 514,400.00 தொகை அறவிடப்பட்டுள்ளது. | முறைமைப்படுத்தி குறித்துரைத்த கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

## 33. மெததும்பற பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| (அ) சபைக்குச் சொந்தமான காணிகள் மதிப்பீடு செய்யப்படாமல் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 10 வாடிக்கையாளர்களிடமிருந்து 08 மாதங்கள் முதல் 09 வருடங்கள் வரையான காலத்திற்குரிய ரூபா 468,815 நிலுவைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முறைமைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறைபாடுகள் சரிசெய்யப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) சபைக்குச் சொந்தமான சொத்துக்களை வாடகைக்கு வழங்கியமையால் 2004 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை அறவிடுவதற்கு காணப்பட்ட | இந்த நிலுவை வாடகை தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2021.12.31 இல் உள்ளவாறு நிலுவை ரூபா 1,075,621.49 ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| நிலுவை வாடகை ரூபா 1,081,396 ஆகும். | | | |

### 34. பன்வில பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 30 கடைகளின் வாடகைகளை அறவிடும் போது 2009 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்படாமல் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்பட்டமையால் ரூபா 3,110,500 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்து பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது 30 கடைகள் தொடர்பான வழக்கு 2022 ஏப்ரல் மாதம் அளவில் விசாரணைக்கு எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. |

### 35. மினிப்பே பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| (அ) முன்னாள் தலைவர் அத்திவாரமொன்றை உடைத்து அகற்றியதன் காரணமாக ஏற்பட்ட ரூபா 24,709 நட்டத்தில் காணப்பட்ட வழக்கின் முறைப்பாட்டாளருக்கு ரூபா 500,000 தொகையும் மற்றும் அதற்குரிய சட்டரீதியான வட்டியொன்றையும் செலுத்துவதற்கு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. பிரதேச சபை நிதி செலுத்தாமையின் காரணமாக பிரதேச சபைக்குச் சொந்தமான ரூபா 1,500,000 பெறுமதியான கெப் வண்டி மற்றும் ஹசலக்க நகரத்தில் 14 ஆம் இலக்க கடை என்பன நீதிமன்றத்தால் பொறுப்பேற்கப்பட்டிருந்த துடன் | நட்டம் தொடர்பாக பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உதவி உள்ளூராட்சி ஆணையாளர் மூலம் விசாரணை சபையொன்று நியமிக்கப்பட்டு பரிசோதனை மேற்கொள்ளப் படுகின்றது. | சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழக்கு சமசரத்திற்கு கொண்டுவரப்பட்டு 2018 யூலை 26 ஆந் திகதி ரூபா 530,500 இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக சபைக்கு ஏற்பட்டிருந்த ரூபா 2,030,500 நட்டம் தொடர்பாக பரிசோதனையொன்றை நடாத்தி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 59,078,700 செலவில் நிர்மாணிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தில் பொது நூலகம், தகவல் தொழில்நுட்ப நிலையம், சுகாதார நிலையம், தாய் சேய் மற்றும் ஆயுர்வேத நிலையம் மற்றும் சனசமூக மண்டபம் போன்றவற்றை தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்த போதிலும் முதலாவது மாடி அலுவலகத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்த துடன் இந்தக் கட்டிடத்தின் தரைமாடி மற்றும் இரண்டாவது மாடியில் 14000 சதுரஅடி அளவு எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | விரைவாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படல் வேண்டும். | முதலாவது மாடி மகாவலி அபிவிருத்தி நிறுவனத்திற்கும் மற்றும் சதொச நிறுவனத்திற்கும் வாடகைக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | இரண்டாவது மாடி விளைவற்றுக் காணப்படுகின்றது. |

## 36. உடுதும்பற பிரதேச சபை

-------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 19 கடைகளின் மாதாந்த வாடகை 2018 மே 22 ஆந் திகதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அந்த மதிப்பீடு அமுல்படுத்தப்படாமையின் காரணமாக அறவிட வேண்டிய ரூபா 1,656,640 தொகையொன்றை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் கடை வாடகையை அறவிடுவதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல் வேண்டும். | வழக்கு நடவடிக்கைகளுக்கு உட்பட்டு பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 05 கடைகளில் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் பணம் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட வில்லை. |

## 37. குண்டசாலை பிரதேச சபை

-----------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | சிறிமல்வத்த வீடமைப்பு உத்தேச திட்டத்தில் 9 ஆம் இலக்க காணி கூறைக் கொள்வனவு செய்வதற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,230,910 செலுத்தப்பட்டிருந்த போதும், செலுத்த வேண்டிய மிகுதிப் பணத்தை செலுத்தி காணியை கையேற்பதற்கோ அல்லது செலுத்தப்பட்ட பணத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியினை கொள்வனவு செய்வதற்கோ அல்லது செலுத்தப்பட்ட பணத்தை மீள அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சபையின் மூலம் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்ட பணத்தை மீள வழங்குமாறும் பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட காணிப் பகுதியை சபைக்கு கையளிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. | தீர்த்து வைக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பலகொல்ல மொரகஹபிட்டிய பல்நோக்கு கட்டிடத்திலும், திகன பல்நோக்கு கட்டிடத்திலும் கடைகளின் | மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் கடை வாடகையை அறவிடல் மற்றும் | இந்தக் கடைகளுக்காக புதிய மதிப்பீடு கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அதன் பிரகாரம் உரிய | தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு அமுல்படுத்தப் படாமையினால் ரூபா 19,080,000 வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன் புதிய மதிப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டை அமுல்படுத்துதல் வேண்டும். | வாடகையாளர்களுக்கு உடன்படிக்கை செய்வதற்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. எனினும் அந்த புதிய மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டுள்ள கட்டணம் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்ததாக காண்பித்து கடை உரிமையாளர்களினால் எதிர்ப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு இந்த எதிர்ப்பு அனுப்பப்பட்டுள்ளதுடன் இதுவரை அவர்களிடமிருந்து இறுதி தீர்மானம் கிடைத்திருக்கவில்லை. | |
| (இ) | தனியார் ஹொட்டலொன்றினால் போலியாக தயாரிக்கப்பட்ட கணக்குத் தொகுதியின் அடிப்படையில் 2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 2,358,313 வரித் தொகை செலுத்தப்பட்டிருந்த போதும், சுற்றுலா சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட கணக்கு கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 14,462,640 வருமானமொன்று | உரிய வருடங்களின் நிதிக்கூற்றுக்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதன் பிரகாரம் அறவிட வேண்டிய குறித்துரைத்த வரித் தொகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2015 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டிற்கும் தனித்தனியாக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | குறித்துரைத்த வருமானத்தை அறவிடுவதில் பிரச்சினைகள் காணப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| குறைவாக அறவிடப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருக்கும் போது அந்த வருமானத்தை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் 2018, 2019 ஆம் ஆண்டுகளுக்காகவும் உரிய நிறுவனத்தினால் சபைக்கு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | | |

## 38 கொட்டகல பிரதேச சபை

----------------------------------------

| | | | |
|---|---|---|---|
| 2015 மே 11 ஆந் திகதி ரூபா 83,373,432 செலவில் சபை புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதற்காக ரூபா 21,559,211 செலுத்தப்பட்டிருந்தது. நிர்வாக தொழில்நுட்ப பிரச்சினையின் காரணமாக அந்த வேலைகள் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நிறுத்தப்பட்டிருந்தது. | உரிய தரப்பினருடன் இணக்கப்பாட்டிற்கு வந்து செயற்திட்டத்தை பூர்த்தி செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சரிசெய்யப்பட்டிருக்க வில்லை. |

## 39. கொத்மலை பிரதேச சபை

---------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (அ) 2018 ஆகஸ்ட் 09 ஆந் திகதி வரையில் பிரதேச சபைக்கு புதிய இரண்டு மாடிக்கட்டிடத்தின் முதலாவது கட்ட நிர்மாணத்திற்காக ரூபா 11,112,792 செலவிடப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முதலாவது கட்டம் பூர்த்தி செய்து இரண்டாவது கட்டத்திற்கான மதிப்பீடொன்றை வழங்குமாறு | சரிசெய்யப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எனினும், சபைக்குச் சொந்தமாக போதியளவான பணம் காணப்பட்ட போதிலும் அதன் மிகுதி வேலைப்பகுதியை நிர்மாணித்தல் 2020 ஏப்ரல் வரையிலும் ஆரம்பிக்கப் படாமையின் காரணமாக ஈடுபடுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் பணத்தில் நலன்களை பெற்றுக் கொள்ளல் தாமதமடைந்தமை மற்றும் எதிர்கால விலைகளின் எண்ணிக்கை அதிகரித்து செல்லும் பாதகமான நிலைமைக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமையில் காணப்பட்டது. | | உள்ளூராட்சி ஆணையாளரின் மூலம் மத்திய மாகாண பொறியியல் சேவைத் திணைக்களத்திற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நவங்கம குடிநீர் செயற்திட்டம் 2020 திசெம்பர் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 திசெம்பர் 13 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டு ரூபா 1,979,598 பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2021 யூன் 26 ஆந் திகதி ரூபா 1,067,766 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்குவதற்கு தவறியிருந்தது. | மதிப்பீடு மற்றும் குறித்துரைத்த மாதிரிகளின் பிரகாரம் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் செயற்திட்டத்தை செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வருதல் வேண்டும். | அபிவிருத்தி முன்மொழிவின் குறைபாடுகளினால் ஒப்பந்தகாரருக்கு ஒரு பகுதி செலுத்தப்பட்டிருந்தது. | சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. |

## 40. அங்குரன்கெத்த பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| அங்குரன்கெத்த பொதுச் சந்தை கட்டிட தொகுதியில் 12 கடைகளிலிருந்து 04 முதல் 09 வருடங்கள் வரையான காலமாக கொண்டு வரப்படுகின்ற ரூபா 2,214,537 நிலுவை கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. உரித்தைக் கையேற்பதற்கான கோவைகளை தயாரித்தல் மாத்திரம் மேற்கொள்ளப் பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சட்டரீதியான உரித்தை கையேற்பதற்கு வழக்கு தொடர்வதற்காக கோவைகள் தயாரிக்கப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு 2020 பெப்ரவரி 05 ஆந் திகதி கையளிக்கப்பட்டுள்ளது. | சரிசெய்யப்பட்டிருக்க வில்லை. |

## 41. அக்மீமன பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| சபையினால் தலகஹ ஹெட்டிய கம்மெத்த வயல் காணியின் ஒரு பகுதி உரிமையாளரின் விருப்பமின்மையின் அடிப்படையில் சபையின் பெயருக்கு 1997 திசெம்பர் 11 ஆந் திகதி கையேற்றமையால் உரிமையாளர் தொடர்ந்த வழக்கின் அடிப்படையில் ரூபா 1,187,475 தொகை செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்ததுடன் உரிய காணியில் கட்டிடத்தை அகற்றுவதன் அடிப்படையில் ரூபா 46 இலட்சம் இழப்பீடு கோரி வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. | சட்டங்கள், விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய சபை உறுப்பினரிடமிருந்து மிகைக் கட்டணத்தை அறவிடுவதற்கு உரிய உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரையிலும் பதில் கிடைக்கப் பெறாதிருந்ததுடன் 657 ஆம் இலக்க வழக்கு இன்னும் நீதிமன்றத்தில் விசாரணையில் காணப்படுகின்றமையை குறிப்பிடுகின்றோம். | 2022.02.10 ஆந் திகதி வரை உள்ளூராட்சி ஆணையாளரிட மிருந்து ஆலோசனை கிடைக்கப் பெறாதிருந்ததுடன் 657 ஆம் இலக்க வழக்கு தற்போதும் நீதிமன்றத்தில் விசாரணையில் காணப்படுகின்றது. |

## 42. எல்பிட்டி பிரதேச சபை

----------------------------------------

| | | | |
|---|---|---|---|
| நீண்ட காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படுகின்ற பெக்கோ இயந்திர வருமானம் ரூபா 940,837 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வருமானத்தை அறவிடல் தொடர்பாக தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 43. கரந்தெனிய பிரதேச சபை

--------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| 2006 ஆம் ஆண்டின் போது மேல் மாகாண விளையாட்டுத் துறை அமைச்சின் மூலம் கணிசமான பெறுமதியுடைய உடற்பயிற்சி விளையாட்டு பொருள் இருப்பு சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டின் போதும் அந்த அமைச்சின் நிதிஏற்பாட்டின் மூலம் ரூபா 1,470,000 செலவில் சபைக்கு சொந்தமான காணியொன்றில் உடல் ஆரோக்கியம், உடற்பயிற்சி அபிவிருத்தி நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போதும், சபையிலிருந்து கிடைத்த தகவலின் பிரகாரமும் 2011 ஆம் ஆண்டின் பின்னர் இந்த உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன் இது தொடர்பாக எந்தவொரு தகவலும் சபையிடம் காணப்படவில்லை. | உபகரணங்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவர வேண்டியிருந்ததுடன் செயற்திட்டத்திலிருந்து பிரதேசத்தின் மக்களுக்கு சேவை வழங்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் உபகரணங்களை பதிவேடுகளுக்கு கொண்டு வந்து மக்களுக்கு சேவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த நிலம் மாத்திரம் சபைக்குச் சொந்தமாக இருந்ததுடன் உரிய விளையாட்டு உபகரணங்கள் கரந்தெனிய பிரதேச செயலகத்துக்கு உரியதாக இருந்ததுடன் அவை பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதை குறிப்பிடுகின்றோம். |

## 44. பத்தேகம பிரதேச சபை

---------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான 02 ஏக்கர் 14.4 பேர்ச் பரப்பளவான லேல்வளவத்த பன்வில காணியை கையேற்பதற்காக ரூபா 2,044,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் கையேற்றல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | காணியின் உரித்தை சட்டரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சட்டரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | இந்தக் காணி தொடர்பாக வழக்கொன்று காணப்படுவதுடன் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு செலுத்தப்பட்டுள்ள பணத்தை மீள எங்களுக்கு செலுத்துமாறு பல சந்தர்ப்பங்களின் போது கோரப்பட்டுள்ளது. |
| (ஆ) | மாகுறுகொடவத்த காணியில் வாராந்த சந்தை நிர்மாணம், கழிவுப்பொருள் தளம் நிர்மாணம் மற்றும் நகர மண்டபத்தை நிர்மாணித்தல் என்பவற்றிற்கு காணியை கையேற்பதற்கு ரூபா 500,000 தொகையொன்று காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் காணி கையேற்றல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | காணியின் உரித்தை சட்டரீதியாக கையேற்று செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது வரையில் காணி கையேற்பதற்கு முடியாதிருந்தது. | இது தொடர்பாக எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது |
| (இ) | 2003 ஆம் ஆண்டு முதல் வாடகை உடன்படிக்கையின்றி இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு | கடை உடன்படிக்கையின் பிரகாரம் வாடகைக்கு வழங்குவதற்கும் நிலுவை வாடகை | 2019 ஆம் ஆண்டில் சரியாக வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ரூபா 34,875 தொகையொன்றை பதிவழிப்பதற்கு சபை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் |

| | | | |
|---|---|---|---|
| வழங்கப்பட்ட மீன் கடைகள் 2018 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் மூடப்பட்டிருந்தது. அந்தக் கடைகள் 2018 ஆம் ஆண்டின் மே 31 ஆந் திகதி மீண்டும் சபைக்கு கையேற்கப்பட்டிருந்த போதிலும் அறவிட வேண்டிய நிலுவை வாடகையான ரூபா 652,723 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | கௌரவ ஆளுனரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. |

## 45. பலப்பிட்டி பிரதேச சபை

----------------------------------------

| | | | |
|---|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொருட்கள் தொடர்பாக சபைக்கு நிரந்தர தீர்வொன்று காணப்படாதிருந்ததுடன் சேகரிக்கப்படுகின்ற கழிவுகளை மண்இட்டு மூடுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 626,520 தொகை செலவிடப்பட்டிருந்தது. | கழிவுப்பொருள் முகாமைத்துவத் திற்காக நீண்டகால வேலைத்திட்டமொன்று தயாரித்தல் வேண்டும். | எதிர்காலத்தில் அரசாங்கத்தின் காணியொன்றை கையேற்று கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கு நிரந்தர தீர்வொன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | கழிவுப்பொருள் முகாமைத்துவத் திற்காக நீண்டகாலத் தீர்வாக கொஸ்கொட நானதொட்ட அரசாங்கத்தின் காணியில் கூட்டுப்பசளைத் செயற்திட்டத்திற்காக முன்மொழியப் பட்டிருந்த போதிலும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

## 46. பெந்தோட்டை பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| சபையின் கெப் வண்டியின் என்ஜினை முழுமையாக பழுதுபார்ப்பதற்காக ரூபா 802,884 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் ஒரு வருட உத்தரவாதக் காலத்திற்கு முன்னர் என்ஜின் செயலிழந்த நிலைமைக்கு உட்பட்டிருந்தது. சாரதிக்கு வழங்கப்பட்டிருந்த ஆலோசனை பின்பற்றப்படாமையால் இந்த பொறுப்பை கையேற்க முடியாதென பழுதுபார்த்த நிறுவனம் சபைக்கு அறிவித்திருந்ததுடன் மீண்டும் பழுதுபார்ப்பதற்காக வாகனம் முகவர் நிறுவனத்தின் மூலம் ரூபா 2,682,755 மதிப்பீடொன்றை பெற்றிருந்தது. இது தொடர்பாக ஆரம்ப விசாரணையொன்று நடாத்த வேண்டியமைக்கு இயந்திர பொறியியலாளர் 2018 ஏப்ரல் 05 ஆந் திகதி கடிதம் மூலம் அறிவித்திருந்த போதிலும் 2019 பெப்ரவரி 15 ஆந் திகதி வரை ஆரம்ப விசாரணைகள் இடம்பெற்றிருக்கவில்லை. | ஆரம்ப விசாரணையொன்று மேற்கொண்டு பொறுப்புவாய்ந்த நபரை இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சித் திணைக்களம் ஊடாக ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப் படுகின்றது. | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2019.08.09 ஆந் திகதிய 04/03/01/08(3) ஆம் இலக்க ஆரம்ப விசாரணை அறிக்கையொன்று வழங்கப்பட்டிருந்த துடன் அதன் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. |

## 47. ஹபராதுவ பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| அகங்கம பொதுச் சந்தைத் தொகுதியில் வாடகைக்கு வழங்கப்பட்ட 77 கடைகளிலிருந்து முற்பணமாக ரூபா 17,055,200 மற்றும் வாடகையாக ரூபா | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை முற்பணம் ரூபா 2,742,400 மற்றும் நிலுவை வாடகை ரூபா 260,210 என்பன |

| | | | |
|---|---|---|---|
| 410,149 தொகைகள் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | மேலும் அறவிடுவதற்கு காணப்பட்டது. பணம் செலுத்துதலை புறக்கணித்த கடைகளுக்காக 03 மாத காலம் சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ள துடன் அது முடிவடைந்ததன் பின்னர் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 48. தெவிநுவர பிரதேச சபை

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | 2014 திசெம்பர் 11 ஆந் திகதி சபையினால் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 2,700,000 செலவில் அப்பறுக்க பிரதேசத்தில் 04 ஏக்கர் காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் பொதுமக்களின் எதிர்ப்பினால் அதை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. மாத்தறை, தங்காலை பிரதான வீதிக்கு அடுத்தாலுள்ள தனியார் காணியொன்றில் | முறையாக கழிவுப் பொருட்களை அகற்றுதல் வேண்டும். | உக்கும் கழிவுப் பொருட்களை மாத்திரம் முறையாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுகளை வெல்லமடம மோலவத்த தனியார் காணியில் அகற்றப்பட்டிருந்த துடன் அது குடாவிற்கு அண்மித்த காணியாக காணப்படுவதுடன் தற்போது 2019 ஆம் ஆண்டு முதல் பொலித்தீன், பிளாஸ்ரிக் வேறு பிரிக்கப்பட்டு சேகரிக்கும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | முறையற்ற வகையில் கழிவுப்பொருட்கள் கொண்டு போடப்பட்டமையினால் அருகில் உள்ள பல்கலைக்கழகம், பாடசாலை மற்றும் பொதுமக்களுக்கு சுற்றாடல் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | | | அதன் பிரகாரம் உக்கும் கழிவுப் பொருட்கள் மாத்திரம் அந்த இடத்தில் போடப்படுவதுடன் உக்காத கழிவுப் பொருட்கள் கொட்டவில மீள் சுழற்சி நிலையத்திற்கு கையளிக்கப் படுகின்றது. |
| (ஆ) | தெவிநுவர கப்புகமயில் அமைந்துள்ள மெதகொடஹேன வத்த என்ற பெயருடைய காணியில் பிரித்து ஒதுக்கப்பட்ட 15.33 பேர்ச் காணியின் 34 ஆம் இலக்க கூறு 2004 யூன் 21 ஆந் திகதிய கையளித்தல் முறியினால் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் தலைவரால் 2006 பெப்ரவரி 13 ஆந் திகதி 10980 ஆம் இலக்க விற்பனை முறியில் வெளிநபருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. | தேவையான நடவடிக்கைகளை விரைவாக எடுத்து காணி சபைக்கு கையேற்கப்படல் வேண்டும். | சபை ஆதனங்களை விற்பனை செய்தல் தொடர்பாக விற்பனையாளருக்கு எதிராக வழக்கு தொடருவதற்காக உரிய ஆவணங்களுடன் கோவை சட்டத்தரணிக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், சட்டத்தரணி வழங்கிய ஆலோசனைகளின் பிரகாரம் தற்போதைய நிலைமைக்குரிய ஏனைய ஆவணங்களையும் உள்ளடக்கி 2019 நவம்பர் 28 ஆந் திகதி மீண்டும் சட்டத்தரணிக்கு கையளிக்கப்பட்டுள்ளது. | சட்டரீதியான நடவடிக்கைகளுக்காக கோவை சட்டத்தரணிக்கு கையளிக்கப் பட்டுள்ளது. கொவிட் 19 நிலைமையினால் இத்தினங்களில் நீதிமன்ற நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2020 ஆம் ஆண்டில் தெவிநுவர எசல சல்பில்லுக்காக தற்காலிகமாக கடைகள் மற்றும் நிலக்கூறுகளை வழங்கும் போது குறித்துரைத்த திட்ட முறைமை பின்பற்றப்படாமையின் காரணமாக சபைக்கு ரூபா 4,016,300 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | கேள்வி கோரி வாடகைக்கு வழங்குதல் வேண்டும். | 2017 ஆம் ஆண்டில் கேள்வி நடைமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பிரதம அமைச்சரின் கட்டளை மற்றும் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் அந்த திட்ட முறைமை இடைநடுவே நிறுத்துவதற்கு ஏற்பட்டிருந்தது. சில சந்தர்ப்பங்களில் நிலத்தின் அமைவிடத்தின் பிரகாரம் கடைகளை விற்பனை செய்து கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் சில வியாபாரிகள் தமது வியாபார நிலையங்களுக்கு அண்மித்த விற்பனை செய்யப்படாத கடைகளில் வியாபார பொருட்களை வைத்திருந்தனர். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | ஏசல சல்பில் செயற்பாடுகளுக்குரிய விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த தற்காலிக கடைகள் மற்றும் 84 நில கூறுகளில் இருந்து ரூபா 2,026,800 கடை வாடகைப் பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விற்பனை செய்யப்படாத சகல தற்காலிக கடைகள் மற்றும் நிலக் கூறுகளை அனுமதியின்றி பிடித்து வைத்திருக்கின்ற நடமாடும் வியாபாரிகளை நிரந்தரமாக அகற்றுவதற்கு | விற்பனை செய்வதற்கு முடியாதிருந்த தற்காலிக கடைகள் மற்றும் 84 நிலக்கூறுகள் மிகுதி காலங்களுக்குரிய கட்டணங்களை செலுத்தி வியாபாரத்தை நடாத்திச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுக்கப்படும். | செல்வதற்கு இணங்கிய வியாபாரிகளுக்கு இணங்கிய திகதி முதல் மிகுதி காலத்திற்கான கட்டணத்தை அறவிட்டு வியாபாரத்தை செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. |

## 49. கம்புறுப்பிட்டி பிரதேச சபை

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | 2014 மார்ச் 20 ஆந் திகதிய திட்டமிடல் குழு தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த இலக்கம் BA/2014/05 என்ற கட்டிட அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தில் வணிக பயன்பாட்டிற்காக 1306.93 சதுர மீற்றர் நான்கு மாடிக் கட்டிட திட்டத்தின் மோட்டார் வாகன தரிப்பிடமாக 06 இடங்கள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மோட்டார் வாகனத் தரிப்பிடத்திற்கு 01 இடத்திற்காக மாத்திரம் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சின் 2009 ஏப்ரல் 17 | தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். | BA/2014/05 என்ற கட்டிட விண்ணப்ப பத்திரத்தில் கட்டிடத்தின் திட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அந்த இடம் ஒதுக்கப்படாமல் மோட்டார் வாகன தரிப்பிட நிலையங்கள் 05 இற்காக ஒரு இடத்திற்கு ரூபா 500,000 வீதம் ரூபா 2,500,000 செலுத்துமாறு அக்கட்டிடத்தின் உரிமையாளரான ச.ண.ச சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்ட ரீதியான ஆலோசனைகளைப் பெறும் வகையில் தென் மாகாண சட்ட பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் பயன்பாட்டை மாற்றுவதற்காக மீண்டும் ஒரு இடத்திற்கு ரூபா 500,000 வீதம் வாகன தரிப்பிட நிலையங்கள் 05 இற்காக ரூபா 2,500,000 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | | | |
| (ஆ) 2006 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 1,168,845 தொங்கல் கணக்கின் செலவு மீதி 2020 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அது தொடர்பாக கண்டறிந்து தேவையான சீராக்கங்களைச் செய்து தொங்கல் கணக்கு தீர்த்து வைக்கப்படல் வேண்டும். | தற்போது வரையில் தீர்த்து வைப்பதற்கு முடியாதுள்ளது. | இதுவரை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 50. கொட்டபொல பிரதேச சபை

-----------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 900,900 பெறுமதியான 1300 பிளாஸ்டிக் கதிரைகள் உடன்படிக்கைப் பத்திரத்தின் மூலம் ஒரு கதிரைக்கு ரூபா 8 கட்டணம் அறவிட்டு வாடகைக்கு வழங்குவதற்கு சபை தீர்மானித்திருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 08 ஆந் திகதி வரை ரூபா 450,450 பெறுமதியான 650 கதிரைகள் எந்த தரப்பினருக்கு வழங்கப்பட்டதென வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சபைத் தீர்மானத்தின் பிரகாரம் கதிரைகளை வழங்குதல் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் பதிவேடொன்று பேணப்பட்டு முறையான பிரகாரம் கதிரைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மிகுதி கதிரைகளை விரைவாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 51. திக்வெல்ல பிரதேச சபை

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | கொட்டகொட பாத்தேகம சந்தி முதல் உடுபிட்டி வீதியில் நீர்க் குழாய்ளை பதிக்கும் போது சேதப்படுத்தப்பட்ட வீதிப் பகுதிகளை நவீனமயப்படுத்துவதற்குரிய ரூபா 1,774,650 மதிப்பீடொன்று 2016 நவம்பர் 15 ஆந் திகதி தேசிய நீர்வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அந்த நிறுவனத்திலிருந்து ரூபா 1,632,150 தொகை 2017 ஒக்தோபர் 19 ஆந் திகதி சபைக்கு கிடைத்திருந்தது. மேலும், நீர்க்குழாய்களை பதிக்கும் செயற்பாடுகள் 2019 மே 29 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் உரிய வீதியின் நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய வீதியின் நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளை விரைவாக பூர்த்தி செய்தல் வேண்டும். | வீதியின் நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்காக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | இன்னும் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் | சட்டத்தின் பிரகாரம் வரித் தொகை அறவிடப்படல் வேண்டும். | கட்டணங்கள் குறைத்து அறவிடப்பட்ட ஹோட்டல்களில் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு | நிலுவைக் கட்டணத்தை அறவிடல் தொடர்பாக எதிர்காலத்தில் |

| | | | |
|---|---|---|---|
| நடாத்திச் செல்லப்படுகின்ற 02 ஹோட்டல்களிலிருந்து 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 14,640,260 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்ததுடன் 12 ஹோட்டல்களிலிருந்து கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. |

## 52. ஹக்மன பிரதேச சபை

---------------------------------------

| | | | |
|---|---|---|---|
| பல வருட காலம் முதல் முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 873,211 தொகையான தொங்கல் கணக்கின் வரவு மீதியை இனங்கண்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அது தொடர்பாக கண்டறிந்து கணக்குகளில் தேவையான சீராக்கங்களை செய்து தொங்கல் கணக்கு தீர்த்து வைக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரிசெய்வதற்கு தேவையான தகவல்கள் கண்டறியப்படுகின்றது |

## 53. சூரியவெவ பிரதேச சபை

------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்ட ரூபா 589,343 தொகையான தொங்கல் கணக்கின் மீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான சீராக்கங்களை செய்து கணக்குகள் சரிசெய்யப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் இனங்கண்டு கொள்வதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. | தொங்கல் கணக்கின் மீதியை இனங்காண்பதற்கு முடியாமையினால் அதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் உதவி கோரப்பட்டுள்ளது. |

## 54. கட்டுவன பிரதேச சபை

---------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டின் போது 05 கடைகளிலிருந்து கிடைக்க வேண்டிய முற்செலுத்தும் பணம் ரூபா | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பெற வேண்டிய ரூபா 200,000 தொகைக்காக வழக்கு தொடரப்பட்டுள்ள | நிலுவை முற்செலுத்தும் பணத்தை விடுவிப்பதற்காக |

| | | | | |
|---|---|---|---|---|
| | 8,745,000 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | துடன் மிகுதி நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு சமசர சபைக்கு அனுப்பப்படும். | ஆளுனரின் ஆலோசனையை பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. |

## 55. ஜா-எல பிரதேச சபை

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | 2000 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற தீர்த்து வைக்கப்படாத தொங்கல் கணக்கு மீதி ரூபா 236,425 ஆகும். | முன்னிருந்து கொண்டு வரப்படுகின்ற மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும். | கணக்கு நடவடிக்கைகள் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளுதல் மற்றும் சரியாக தயாரிக்கப்படும். | உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மூலம் அனுப்பப்பட்டுள்ள துடன் அதற்காக அங்கீகாரம் கிடைத்த பின்னர் இந்த மீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது |
| (ஆ) | கந்தான புகையிரத நிலைய வீதியின் குடியிருப்பாளர் ஒருவரினால் கட்டிடம் ஒன்றிலிருந்து தமது வீட்டிற்கு ஏற்படுகின்ற இழப்பு நட்டங்கள் தொடர்பாக சபை செயற்படாமையினால் சபைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் வழக்கிற்கு சபைக்காக பிரதிநிதி ஒருவர் சமூகமளிக்காமையின் காரணமாக 2003 யூலை 31 ஆந் திகதி ஒரு தரப்பாக தீர்மானம் வழங்கப்பட்டிருந்தது. வழக்கு விசாரணையில் | சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு கொள்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இந்த வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் முறைப்பாட்டு தரப்பினருக்கு இழப்பீட்டு பணமாக ரூபா 4,168,015 தொகையை மூன்று தவணைகளில் செலுத்தப்பட்டுள்ளது. |

சபையின் பிரதிநிதி ஒருவர் செல்லாமை நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட்டு ஒரு தரப்பாக முறைப்பாட்டாளருக்கு சாதகமாக வழக்கு தீர்ப்பு வழங்கப்பட்டிந்தது. நீதிமன்றத்தால் 2003 ஆம் ஆண்டின் போது செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ரூபா 500,000 தொகை மற்றும் மாதாந்த நட்டக் கட்டணம் ரூபா 10,000 என்பவற்றை செலுத்துதல் தொடர்பாக சலுகையொன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் 2020 ஆம் ஆண்டு வரையில் செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா 4,168,015 வரை அதிகரித்திருந்தது. 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்தப் பணத்தை செலுத்துவதற்கோ அல்லது ஆகக்குறைந்த கட்டணத்தை நிர்ணயித்துக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்காதிருந்த துடன் அது தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | ராகம மற்றும் கந்தான பொதுச் சந்தையில் இறைச்சி விற்பனைக் கடைகளில் முறையே 03 மற்றும் 02 என்பன 2019 ஆம் ஆண்டிற்காக கேள்வி நடைமுறைகளுக்கு புறம்பாக உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டிற்காக அதில் ரூபா 8,473,590 நிலுவை வாடகைப் பணம் அறவிடப்படாதிருக்கும் போது சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2019 ஆம் ஆண்டிற்கான நிலுவை வாடகைத் தொகையான ரூபா 29,294,407 அறவிடப்படாமை தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை செயற்பாடுகளின் பிரகாரம் வாடகைக்கு வழங்குவதற்கும் நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவை செலுத்தாமையினால் கடைகளை முத்திரை வைப்பதற்கு தீர்மானம் எடுப்பதற்காக 2022 பெப்ரவரி மாதம் கௌரவ பொதுச் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. | இந்த இறைச்சிக் கடைகள் 2021 ஆம் ஆண்டின் போது கேள்வி கோரி வழங்கப்பட்ட போதிலும் கேள்வி பணம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. பணத்தை செலுத்துமாறு கேள்விதாரர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்ட போதும் அவர்கள் கொவிட் தொற்று நோயினால் கடைகளை மூடி வைப்பதற்கு ஏற்பட்டமையால் வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு முடியாதிருந்ததாக அறிவித்திருந்தனர். |
| (ஈ) | ஸ்டார்டன் எஸ்டேட் காணி கூறிடப்பட்டு விற்பனை செய்யும் போது 10 ஏக்கர் நில அளவு பொதுச் செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 1986 இல் பிரதேச சபை தாபிக்கும் | பிரதேச சபைக்கு உரித்துடைய காணிகளின் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது பொது வசதிகளுக்கான காணிகள் உரித்துறுதி மூலம் கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. | அதன் பிரகாரம் இந்த உரித்துறுதியை அந்த நிறுவனத்தின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போது அந்த பொதுக் காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அது வெளித்தரப்பினரால் கைப்பற்றப்பட்டிருந்தது. இதுவரையில் தனியார் நிறுவனமொன்றினால் உரிமை கோரப்படுகின்ற இந்தக் காணியில் 69 பேர்ச் ஐ பிரதேச சபைக்கு கையளிப்பதற்கு இணங்கியிருந்த போதிலும் அந்த நிலப் பகுதியும் கையேற்கப்பட்டிருக்க வில்லை. | | | |
| (உ) | குடஹகபொல பல்நோக்கு கட்டிட நிர்மாணம் ரூபா 8,400,000 மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 7,215,474 தொகையில் 1999 திசெம்பர் 10 ஆந் திகதி உடன்படிக்கை செய்து அத்திவாரம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு 2000 திசெம்பர் 20 ஆந் திகதி வரையில் ரூபா 2,775,657 பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கம்பஹா பிரதேச பொறியியலாளர் பரிந்துரை செய்திருந்த மொத்த ஆற்றப்பட்ட வேலைகளின் அளவின் அடிப்படையில் ரூபா 402,291 தொகை | சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த நபரை இனங்கண்டு கொள்வதற்கு விசாரணையொன்று மேற்கொள்ளுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் (கம்பஹா) இற்கு எழுத்து மூலம் கோரப்பட்டுள்ளது. | இந்தக் கணக்காய்வு பந்திக்குரிய விடயங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள துடன் சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை பொறுப்பு வாய்ந்த நபரை இனங்கண்டு கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

2006 மே 02 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது.
இதற்காக 1999 ஆம் ஆண்டில் சனாதிபதி ஒதுக்கிய ரூபா 25 இலட்சம் பணம் செலவிடப்படாமயினால் மீள திருப்பி அனுப்பி மீண்டும் 2000 ஆம் ஆண்டின் போது கம்பஹா நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 25 இலட்சம் தொகையொன்று ஜா-எல பிரதேச செயலாளருக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் பணிகள் பூர்த்தி செய்யப்படாமையினால் போலியாக உறுதிச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட மையினால் நிதிஏற்பாடு விடுவிக்கப்படாததாக மேல் மாகாண பிரதம செயலாளரால் பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.
அந்த பணம் செலவிடப்படாமைக்கான பொறுப்பை பிரதேச சபையின் தலைவர் ஏற்க வேண்டியிருந்ததுடன் மீண்டும் நிதிஏற்பாட்டை ஒதுக்கிக் கொள்வதற்கு வசதியீனமாக இருந்ததாக மேலும் அறிவிக்கப்பட்டிருந்தது.
பட்டியல்களுக்கு செலுத்தாமையின்

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரச்சினைகளின் அடிப்படையில் உரிய ஒப்பந்தகாரரால் இலக்கம் HC/ARB/2516/10 இன் கீழ் தொடரப்பட்டிருந்த வழக்கு தோல்விக்கு உட்பட்டமையின் காரணமாக வழக்கு கட்டணம் மற்றும் செலுத்த வேண்டிய தொகையான 2,903,319 தொகையை உரிய ஒப்பந்தகாரருக்கு செலுத்துமாறு வழங்கப்பட்ட நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் ரூபா 967,773 வீதம் 03 தவணைகளில் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட்டிருந்தது. 2005 நவம்பர் 30 ஆந் திகதி வரையில் நிர்மாணிக்கப்பட்ட அத்திவாரம் உடைத்து அகற்றப்பட்டிருந்ததுடன் இந்த செயற்பாடுகளினால் சபைக்கு ரூபா 2,903,319 நட்டம் ஏற்பட்டிருந்தது. | | | |
| (ஊ) | கணுவன சமகி மாவத்தை 1 ஆவது ஒழுங்கை 1 ஆம் கட்டத்திற்காக முறையே ரூபா 31,866,537 மற்றும் ரூபா 2,228,787 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். குறித்துரைத்த | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்குரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இந்தக் காசோலயை வங்கியில் இடும் போது ஏதாவது தாமதம் ஏற்பட்டிருந்தமை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள துடன் அதற்காக |

| | | | |
|---|---|---|---|
| பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.2.1 மற்றும் 2.4.1 இன் பிரகாரம் இதற்காக தேசிய ரீதியில் கேள்வி கோரப்பட்டு பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் பெறுகை செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. இதற்காக கேள்வி காப்பீடு ஒப்பந்தகாரர்களுக்கு இறுதிப் பணம் செலுத்திய தினமான 2020 மார்ச் 27 ஆந் திகதியின் பின்னர் 2020 மே 18 ஆந் திகதி 2020 மார்ச் 08 ஆந் திகதி எழுதிய காசோலைகளை கிடைத்திருந்தத. 0.225 மீற்றர் உயரத்தில் 235 கனமீற்றர் அளவான ரெடிமிக்ஸ் கொங்கிறீட் ஈடுபடுத்தப்பட்டதாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 யூன் 12 ஆந் திகதி கணக்காய்வினால் பெறப்பட்ட 04 கொங்கிறீட் குறுக்கு வெட்டுக்களின் சராசரி உயரம் 0.191 மீற்றராகும். அதன் பிரகாரம் கணிப்பிடும் போது பயன்படுத்தப்பட்ட கொங்கிறீட் அளவு 200.28 கனமீற்றராக இருந்த போதிலும் 33.72 | நியமத்தின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். | மதிப்பீட்டை முறையாக தயாரித்தல் தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ள துடன் மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக வேலை அத்தியட்சகருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கொவிட் தொற்றுநோய் சில தாக்கத்தை ஏற்படுத்தியதன் காரணமாக உத்தியோகத்தர்களின் வருகை குறைந்த மட்டத்தில் இருந்தமையை அறியத் தருகின்றோம். மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையில் ரூபா 487,716 தொகை மாத்திரம் அறவிடப்பட்டுள்ளது. |

கனமற்றருக்கு மேதலதிகமாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 565,148 ஆகும். 02 ஆம் கட்டத்தில் வீதியின் ஒரு பகுதியான 35 மீற்றர் நீளம், 1 ஆவது கட்டத்தில் கொங்கிறீட் இடப்பட்டிருந்தமையினால் 2 ஆவது கட்டத்தின் போது ரூபா 949,539 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 56. கட்டான பிரதேச சபை

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | அக்கரபனஹ, வளப் பிரதேசத்தில் அமைந்துள்ள 17.5 பேர்ச் காணிப் பகுதி பொது வசதிகளுக்காக சபைக்கு கையளித்து 25 வருடங்கள் கடந்திருந்த போதிலும் பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் அந்த காணியில் மரங்களாலும் கொங்கிறீட் கற்களாலும் பூர்த்தி செய்யப்பட்ட சிறிய அளவிலான 02 வீடுகள் அனுமதியின்றி நிர்மாணிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது. | சபைக்குச் சொந்தமான ஆதனங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சபைக்குச் சொந்தமான காணியை பாதுகாப்பதற்காக ஒவ்வொரு வருடமும் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டு தேவையான போது நில அளவையாளர் வரைபடங்களுடன் கம்பி வேலி அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் உள்ளுராட்சி திணைக்களத்தின் மூலம் வழக்கு நடவடிக்கைகள் கோவையிடப்பட்டு உரித்தைக் கையேற்பதற்கு நீதிமன்ற செயற்பாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

## 57. மினுவாங்கொட பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| ஜாபாலவத்த கைத்தொழில் பேட்டையில் இரும்பு தகரங்களால் செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை பொருத்தி ஒன்றிணைக்கும் கைத்தொழிற்சாலையின் ஆதனவரி மதிப்பீடு தொடர்பாக வியாபார நிறுவனத்தினால் வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் அதன் போது நீதிமன்றத்தால் திருத்தப்பட்ட மதிப்பீடு தீர்மானிக்கப்பட்ட போதிலும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 557,600 அறவிட வேண்டிய நிலுவை ஆதன வரியை அறவிடுதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனவரி நிலுவையை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய நிலுவைப் பணத்தை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரையிலும் உரிய நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்த துடன் நிலுவை பணத்தை செலுத்துவதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தது. | விநியோகிக்கப் பட்டுள்ள சிவப்பு அறிவித்தலின் விளைவாக நிலுவைப் பணத்தை செலுத்துவதற்கு உரிய நிறுவனம் இணங்கியிருந்ததுடன் 2019 நவம்பர் 19 ஆந் திகதி ரூபா 100,000 தொகை செலுத்தியிருந்ததுடன் எதிர்காலத்தில் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது |

## 58. பியகம பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| கடவத்த உப அலுவலகத்தில் வழக்கு நடவடிக்கைகளில் காணப்படுகின்ற 06 கடைகளிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய கடை வாடகை மீதி ரூபா 6,959,107 ஆகும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடைகளுக்குரியதாக வழக்கு காணப்படுகின்றமையால் அந்த 06 கடைகளின் நிலுவைப் பணத்தை அறவிட முடியாமல் சிட்டையிடப்பட்டிருந்தது. | கடைகளுக்குரியதாக வழக்கு காணப்படுகின்ற மையால் அந்த 06 கடைகளின் நிலுவைப் பணத்தை அறவிட முடியாமல் சிட்டையிடப் படுகின்றது. |

## 59. அத்தனகல்ல பிரதேச சபை

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | வெயாங்கொடை உப அலுவலகத்திற்குரிய 23 கடைகளிலிருந்து அறவிட வேண்டிய 10 வருடங்களை விட பழைய ரூபா 3,276,363 தொகையான முன்செலுத்தும் பண மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு முன்னர் சட்டரீதியான உடன்படிக்கையில் கைச்சாத்திடல் வேண்டும். | முற்செலுத்தும் பணம் செலுத்தாத கடை உரிமையாளர்களுக்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாதிருந்தமைக்கு முறையான உடன்படிக்கை இன்மையே காரணமாகும். தற்போது அவர்கள் புதிய உடன்படிக்கையில் உள்ளடக்குவதற்கு கலந்துரையாடல் நடாத்தப்பட்ட போதிலும் அந்த கடைகளின் பௌதீக திட்டத்திலுள்ள குறைபாடுகளின் பிரச்சினைகளினால் அந்த முயற்சியும் தோல்வியடைந்திருந்தது. மேற்கூறப்பட்ட முற்செலுத்தும் பணத்தை பதிவழிப்பதற்காக சபைக்கு சமர்ப்பித்து ஆளுனரின் அங்கீகாரத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 05 கடைகளில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட கடை வாடகையை செலுத்தாமையின் காரணமாக முத்திரை வைத்து சபைக்கு கையேற்கப்பட்டுள்ளது. 18 கடை உரிமையாளர்கள் கடை வாடகை செலுத்துகின்றனர். அந்த முத்திரை வைக்கப்பட்ட 05 கடைகளில் முற்செலுத்தும் பண நிலுவை ரூபா 661,414.98 ஆகும். கடை உரிமையாளர்கள் கடை வாடகை செலுத்துபவர்களாயிருந்தும் உடன்படிக்கையை நிராகரித்திருந்தனர். ஆதற்கு காரணமாக வியாபாரத்திற்கு தேவையான பின்புலம் அதாவது நீர், உள்நுழைவு வீதி, வாகனத் தரிப்பிடம் இன்மையால் நிராகரிக்கப் பட்டிருந்தது. திட்டத்திற்கு முரணாக நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலக்கம் 39/380 காணி என்ற வழக்கு தொடர்பாக சபை செயற்பட்டுள்ள | மிக விரைவாக விசாரணை அறிக்கையை | 1996 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வீதி பிரச்சினைகளுக்காக | விசாரணை அறிக்கையை பெற்றுக்கொள்வதற்காக உள்ளூராட்சி |

| | | | |
|---|---|---|---|
| விதம் முறையற்ற மற்றும் கவனமின்மையின் காரணமாக சபை நிதியத்திலிருந்து முறைப்பாட்டாளருக்கு 2019 மே 16 ஆந் திகதி ரூபா 1,876,800 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2021 ஏப்ரல் 10 ஆந் திகதி வரையிலும் பொறுப்புக்களை நிர்ணயிப்பதற்கு விசாரணையொன்று மேற்கொண்டு சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற்று நட்டத்தை அறவிடுவற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 39/380 ஆம் இலக்க காணி வழக்கிற்கு உரிய நீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்துவதற்கு வேண்டியேற்பட்டிருந்தது அதன் பிரகாரம் 2019 மே 16 ஆந் திகதி செலுத்தப்பட்ட ரூபா 1,876,800 தொகையை தீர்த்து வைப்பதற்கு அதற்கான பொறுப்பான பொறுப்பை நிர்ணயிப்பதற்கு பரிசோதனையொன்றை மேற்கொள்வதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்காக மீள் நினைவூட்டலும் அனுப்பப்பட்டுள்ளது. | ஆணையாளர் அலுவலகத்திற்கு மீள் நினைவூட்டல் அனுப்பப்பட்டுள்ள போதிலும் இதுவரை பதில் கிடைத்திருக்கவில்லை. |

## 60. பேருவளை பிரதேச சபை

--------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| அரசசார்பற்ற நிறுவனமொன்றின் நிதியுதவியில் 2013 ஆம் ஆண்டின் போது அளுத்கம வாராந்த சந்தை காணப்படுகின்ற இடத்தில் நவீனமயப்படுத்தப்பட்ட 38 கடைகளில் 03 கடைகள் மாத்திரமே திறந்து வைக்கப்பட்டிருந்தன. வீதிக்கு முன்பக்கத்தில் திறக்கும் வகையில் | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமலிருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணங்களுக்காக சரியான பிரகாரம் திட்டமிடப்பட்டு நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | தற்போது 08 கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள துடன் மிகுதி 30 கடைகளையும் வாடகைக்கு வழங்க முடியாதிருந்தது. |

திட்டமிடப்படாமையினால் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு முடியாதிருந்தது.

**61. தொடன்கொட பிரதேச சபை**

-----------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| காணி ஏலவிற்பனையின் மூலம் 2000 ஆம் ஆண்டில் பொதுச் செயற்பாடுகளுக்காக கிடைக்கப் பெற்ற 03 றூட் 14 பேர்ச் அளவான காணிப் பகுதியில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் 02 வீடுகள் நிரந்தரமாக நிர்மாணித்து குடியிருந்து வருகின்றனர். | அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பல வருட காலம் முதல் குடியிருந்து வருகின்றமையால் களப் பரிசோதனையொன்று மேற்கொண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | இதுவரை அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் அகற்றப்பட்டிருக்க வில்லை. |

**62. புளத்சிங்கள பிரதேச சபை**

---------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| தனியார் கம்பனியொன்றினால் சபைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் ஆரம்ப சந்தர்ப்பத்தின் போது சாதகமான தீர்ப்பொன்று கிடைத்ததன் பின்னர் உரிய கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டின் பின்னர் சபையினால் உரிய வழக்கு கவனத்தில் கொள்ளாமல் புறக்கணிக்கப்பட்டமையால் சபைக்கு பாதகமான தீர்ப்பொன்று கிடைத்தமையால் அக்கம்பனிக்கு இழப்பீடாக ரூபா 7,840,000 தொகை செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது. | சபை நிதியத்திலிருந்து செய்யப்பட்ட செலவினத்தை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த விடயம் தொடர்பாக புலனாய்வொன்று கோரி உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | தற்போது வரையில் பிரச்சினை முடிவடைந்திருக்க வில்லை. |

## 63. மதுராவல பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| சபைக்குச் சொந்தமான கெப் வண்டிக்கு 2016 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட வாகன விபத்திற்குரியதாக தெஹிவளை கல்கிஸ்ஸ இயந்திரப் பொறியியலாளரால் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி இழப்பீடு ரூபா 1,134,037 தொகையை அதற்கு பொறுப்பாக இருந்தவர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி இழப்பீட்டை பொறுப்பு வாய்ந்தவரிடமிருந்து அறவிடல் வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரிடம் ஆலோசனை கோரியுள்ளதுடன் ஆலோசனை கிடைத்ததன் பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | எந்தவொரு விசாரணையும் இதுவரை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

## 64. ஹோமாகம பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| மீகொட பொருளாதார நிலைய நம்பிக்கைப் பொறுப்பு சபைக்கு ரூபா 300,000 வருடாந்த வாடகையில் கையளிக்கப்பட்டிருந்த 01 ஏக்கர் 02 றூட் 10 பேர்ச் பரப்பளவையுடைய காணிப் பகுதிக்காக 2013 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்ட ரூபா 900,000 தொகையான புதிய மதிப்பீட்டுப் பணம் கிடைக்காமையின் காரணமாக 2014 முதல் 2018 வரையான ஆண்டுகளுக்காக கிடைக்க வேண்டிய வாடகைப் பணம் மற்றும் தண்டப்பணம் ரூபா 14,750,000 ஆகும். இது தொடர்பாக சட்டரீதியான படிமுறைகளை எடுப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய வருமானங்களை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த நிலுவை பணத்தை செலுத்துமாறு அறிவித்து மீகொட பொருளாதார நிலைய நம்பிக்கைப் பொறுப்பு சபையின் அங்கத்தவருக்கு 2020.12.28 ஆந் திகதி சபை சட்டத்தரணி மூலம் அழைப்பாணை கடிதம் அனுப்பப்பட்டுள்ள போதும், இதுவரை அதற்கு பதிலளிக்கப்படாமையினால் மிகுதி நடவடிக்கையாக வழக்கு தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீகொடை பொருளாதார நிலையத்தின் நம்பிக்கைப் பொறுப்பு சபையில் இதுவரை அங்கத்துவத்தில் இருக்கின்ற அங்கத்தவர்களுக்கு 2020.12.28 ஆந் திகதி அழைப்பாணை கடிதம் அனுப்பப்பட்டுள்ள போதிலும் அந்த அங்கத்தவர்கள் மீண்டும் மாற்றப்பட்ட மையினால் புதிய அங்கத்தவர்களுக்கு சபை சட்டத்தரணி மூலம் அழைப்பாணைக் கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமையை குறிப்பிடுகின்றோம். |

## 65. பொத்துவில் பிரதேச சபை

--------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 6,197,567 ஆக இருந்ததுடன் இது 1-20 வருடங்கள் வரையான காலப்பகுதிக்குரியதாகும். | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கைவிடல் கட்டளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மிகுதி வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | சபையின் வருமானத்தை மேலே கட்டியெழுப்புதல் மற்றும் வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை வழங்கும் நோக்கில் 2008 ஆம் ஆண்டில் World Vision நிறுவனத்திலிருந்து ரூபா 1,231,600 தொகையும், 2011 ஆம் ஆண்டின் போது சபையின் நிதியத்திலிருந்து ரூபா 1,612,127 தொகையும் ஈடுபடுத்தி நிர்மாணிக்கப்பட்ட காகிதாகிகள் மீள்சுழற்சி நிலையம் பயன்படுத்தப்படாமல் அழிவடைந்த நிலையில் காணப்பட்டது. | உரிய சொத்துக்களை குறித்துரைத்த தேவைகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்தக் காகிதாகிகள் மீள்சுழற்சி நிலையத்தை செயற்படுத்துவதற்கு ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கப்படல் வேண்டும். அவ்வாறே அமுல்படுத்துவதற்காக மின்சாரம் அந்த வீதியில் காணப்படவில்லை. அதில் பொருத்தப்பட்டுள்ள உபகரணங்கள் தற்போது பயன்படுத்த முடியாததாக துருப்பிடித்து செயலிழந்து காணப்படுகின்றது. அதனால் இதனை விற்பனை செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சொத்துக்கள் செயலிழந்து காணப்படுகின்றது. |

## 66. அட்டாளைச்சேனை பிரதேச சபை

--------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டில் சபையினால் ரூபா 1,400,000 கிரயத்தில் | முள் அரைக்கும் நிலையத்தை பயன்படுத்துவதற்கு விரைவாக | விரைவாக இதனை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சொத்துக்கள் விளைவற்றுக் காணப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| நிர்மாணிக்கப்பட்ட முள் அரைக்கும் நிலையத்திற்கு அதிசக்தி கொண்ட மின்சார இணைப்பை வழங்குவதிலுள்ள காலதாமதத்தின் காரணமாக இந்த நிலையம் விளைவற்றுக் காணப்பட்டது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | |

## 67. நிந்தவூர் பிரதேச சபை

---------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 3,173,466 ஆக இருந்ததுடன் இது 08-40 வருடங்கள் வரையிலான காலப்பகுதிக்கு உரியதாகும். | நிலுவைக் வாடகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | மின்குமிழ் ஒன்று ரூபா 15,400 வீதம் 328 மற்றும் மின்குமிழ் ஒன்று ரூபா 15,850 வீதம் 72 மின்குமிழ்கள் பொருத்தப்பட்டிருந்தன. இதன் தரத்தையுடைய மின்குமிழ் ஒன்று காரைதீவு பிரதேச சபையினால் ரூபா 9,600 வீதம் பொருத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சபையினால் ரூபா 2,352,400 சிக்கனமற்ற வகையில் செலவிடப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்யும் போது ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பீடு செய்து பொருளாதார ரீதியில் சிக்கனமாக மேற்கொள்ளல் வேண்டும். | எங்களது தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் எமது மாவட்டத்தில் இருக்கின்ற பொருட்கள் காணப்படுகின்ற கடைகளில் கூறுவிலை கோரியதன் பின்னர் இந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. | சிக்கனமாக கொள்வனவு செய்யப்பட்டிருக்க வில்லை. |

## 68. ஆலையடிவேம்பு பிரதேச சபை

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து விளைவற்று / செயற்பாடற்றுக் காணப்படுகின்ற ரூபா 2,365,914 கூட்டுத் தொகையான 02 வங்கி நடைமுறைக் கணக்குகளின் மீதிகளை வருமானத்தை உழைக்கக் கூடிய நிதி மூலங்களில் ஈடுபடுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விளைவற்று / செயற்பாடற்றுக் காணப்படுகின்ற வங்கி கணக்கு மீதிகளை வருமானத்தை உழைக்கக்கூடிய நிதி மூலங்களில் ஈடுபடுத்துதல் வேண்டும். | இதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்படுகின்றது. | வருமானத்தை உழைக்கக் கூடிய நிதி மூலங்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,253,940 செலவில் கண்ணகிபுரம் இல் சேதனப் பசளை தயாரிக்கும் நிலையமொன்றை நிர்மாணித்து அதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 1,210,000 பெறுமதியான இயந்திரம் பொருத்தப்பட்டிருந்த போதும், அந்த நிலையத்தை அமுல்படுத்துவதற்கு இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் எந்தவொரு நடவடிக்கையும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். | பொதுமக்கள் எதிர்ப்பின் காரணமாக இந்த நிலையத்தை அமுல்படுத்த முடியாது காணப்பட்டது. | நிலையம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் கைவிடப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | கம்பனி வீதி முதல் பனங்காடு பாலம் வரை 425 மீற்றர் தூரத்திற்கு குடிநீர் பகிர்ந்தளிப்பதற்கான குழாய்களை பதிக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டில் மாகாண குறித்தொதுக்க மானிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதிஏற்பாடு செய்யப்பட்ட தொகையில் ரூபா 1,498,183 தொகை 2018 சனவரி 10 ஆந் திகதி தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும், அந்த குழாய் பதிக்கும் பணிகள் கணக்காய்வுத் திகதியான 2021 நவம்பர் 17 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | குடிநீர் நீர்க் குழாய்கள் பதிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை விரைவாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையுடன் கலந்துரையாடல் நடாத்தி குடிநீர் குழாய்களை பதிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | குடிநீர் நீர்க்குழாய்களை பதிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

## 69. நாவிதன்வெளி பிரதேச சபை

---------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| அறவிட வேண்டிய இறைச்சிக் கடை நிலுவை வாடகை மற்றும் சந்தைக் கடைகளின் நிலுவை வாடகை ரூபா 1,379,930 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவை 01-03 வருடங்கள் வரையான காலவீச்சிற்கு உரியதாகும். | அறவிட வேண்டிய வாடகை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அறவிடுவதற்கும் பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 70. திருக்கோவில் பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 2,556,847 ஆக இருந்ததுடன் அது 1-20 வருடங்கள் வரையிலான காலப்பகுதிக்கு உரியதாகும். | வாடகை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதனை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 71. சம்மாந்துறை பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் சபையில் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,407,500 பெறுமதியான இலத்திரனியல் விளம்பர அறிவித்தல் பதாதை குறித்துரைத்த தரத்தில் பொருத்தப்படாமல் 08 மாத காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | விளம்பர அறிவித்தல் பதாதையை விரைவாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விளம்பர அறிவித்தல் பொருத்திய நிறுவனத்திற்கு அதனை செயற்படுத்துவதற்கு முடியாது காணப்பட்டதுடன் அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | விளம்பர அறிவித்தல் பதாதையை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 72. காரைதீவு பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| வடகிழக்கு கடற்கரை சமூக அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் ரூபா 14,347,200 செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டின் போது சபைக்கு கையளிக்கப்பட்ட கடைத் தொகுதியில் 17 கடைகளை 12 வருட காலம் முதல் வாடகைக்கு வழங்குவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 73. தமன பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடை வாடகை செலுத்தாத 02 கடைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 208,440 தொகையை அறவிடுவதற்கோ அல்லது சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்து கடைகளை கையேற்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடை வாடகையை அறவிடுவதற்கோ அல்லது கடைகளை மீளக் கையேற்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உடன்படிக்கைகளில் உள்ள குறைபாடுகளை சரிசெய்து அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடுவதற்கோ அல்லது சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்து கடைகளை கையேற்பதற்கான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 74. நாமல்ஓயா பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| சபைக்குரிய மூவங்கல கிராமத்தில் 07 குளத்திற்கு அருகில் பொது பூங்காவை அபிவிருத்தி செய்து தாரா படகு ஈடுபடுத்தும் செயற்திட்டத்திற்கு உரியதாக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் குளத்தை சுத்தப்படுத்துவதற்கு 02 தாரா படகுகள் மற்றும் 04 பூங்கா கதிரைகளுக்காக ரூபா 1,323,500 செலவிடப்பட்டிருந்த போதிலும் உரிய செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை செயற்படு நிலைக்கு கொண்டுவருவதற்கு செலவிடப்பட்ட செலவினங்களுக்கு ஈடாக நலன்களை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற கொவிட் தொற்று நோயின் காரணமாக இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 75. இறக்காமம் பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| (அ) மாகாண சபைகளுக்கான குறித்தொதுக்க அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,338,328 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட கால்நடை அறுவைக்கூடம் | குறித்த நோக்கத்திற்காக அல்லது வேறு நோக்கத்திற்காக கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் | இந்த அறுவைக் கூடம் தற்போது கழிவுப்பொருட்களை மீள்சுழற்சி செய்வதற்காக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதற்கு அண்மித்த பகுதியில் அமைந்துள்ள மயான நிலத்தை கவனத்தில் கொள்ளாமல் நிர்மாணித்தமையின் காரணமாக பொதுமக்களின் எதிர்ப்பின் அடிப்படையில் இதுவரை பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | வேண்டும். | | |
| (ஆ) | UNDP நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 4.975 மில்லியன் செலவில் 2017 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட பொது சந்தையின் மேல்பகுதி 2020 மே 28 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். | 2020 PSDG நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாற்றங்கள் மேற்கொண்டு வாடகைக்கு வழங்குவதற்கு பொருத்தமான பிரகாரம் மாற்றியமைப்பதற்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சந்தை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அபிவிருத்தி நிதி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 4.690 மில்லியன் செலவில் 2018 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட கடைத் தொகுதி 2020 மே 28 ஆந் திகதி வரையிலும் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | கடைத் தொகுதியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்தக் கடை தொகுதியை வாடகைக்கு வழங்குவதற்காக பல்வேறு வங்கிகளுக்கு சென்றுள்ளதுடன் மக்கள் வங்கி அதன் கிளையை மாற்றுவதற்கு விருப்பம் தெரிவித்து இந்தக் கடைத் தொகுதியை மிகவும் குறைந்த பெறுமதியில் கோரியமையால் இது வழங்கப்பட்டிருக்க வில்லை. | கடைத் தொகுதியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 76. வெருகல் பிரதேச சபை

---------------------------------------

| | | | |
|---|---|---|---|
| சபைக்குச் சொந்தமான திறந்த சந்தையில் 02 கட்டிடங்கள், ரூபா 2,272,800 பெறுமதியான 07 கடைகள் மற்றும் ரூபா 1,483,472 பெறுமதியான தொழிற்சாலை கட்டிடம் என்பன 2004 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். | சந்தைக் கட்டிடம் மற்றும் ICE தொழிற்சாலை மீள் நிர்மாணித்தல் தொடர்பாக கலந்துரையாடப் படுகின்றது. | கட்டிடத்தை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 77. தம்பலகாமம் பிரதேச சபை

---------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற இறைச்சிக் கடைகளிலிருந்து நிலுவை வாடகை வருமானம் ரூபா 395,255 தொகையை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை. |

## 78. திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை

------------------------------------------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| சந்தை வாடகை நிலுவை வருமானம் ரூபா 1,188,570 தொடர்ச்சியாக 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கணக்குகளில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்படல் வேண்டும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவைப் பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |

**79. மூதூர் பிரதேச சபை**

-----------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | 2014 முதல் 2019 வரை அறவிட வேண்டிய ரூபா 922,250 பேரூந்து நிலைய கடை வாடகை 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவை வாடகையின் ஒரு பகுதி அறவிடப்படுவதுடன் செலுத்தாதவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | சந்தைக் கடை வாடகை நிலுவை ரூபா 506,000 தொகை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நிலுவை வாடகையை செலுத்தாமல் புறக்கணித்தவர் களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் சட்டரீதியான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
